ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

மாசி
பிப்ரவரி—1978



விலை 70 காசு

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நிவாரணப்பணி

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004
31 ஜனவரி 1978

பேரன்புடையீர்,

1977 நவம்பர் மாதத்திலிருந்து திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் வெள்ள நிவாரணப் பணியைத் துவக்கி மும்முரமாக நடத்தி வருவதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், நன்கொடை கோரி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் விடுத்த வேண்டுகோளுக்கு நல்ல முறையில் பொதுமக்களின் உதவி கிடைத்துள்ளது.

பணமாகவும் பொருள்களாகவும் பல தனி நபர்களும் நிறுவனங்களும் நன்கொடை வழங்கியிருக்கிறார்கள். பண உதவி இதுவரையில் ரூபாய் மூன்று லட்சத்திற்குக் கிடைத்துள்ளது. உணவு, உடை, போர்வைகள், சமையல் பாத்திரங்கள், மருந்து வகைகள் முதலிய உதவிகளை உடனுக்குடன் தந்ததுடன், பாழ்பட்ட குடிசைகளைச் செப்பனிட்டும் புதுப்பித்தும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வழங்கியது. அத்துடன், மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நல்ல கட்டிடங்களைக் கட்டித் தரவும் மிஷன் திட்டமிட்டுள்ளது. இந்த மறுவாழ்வு திட்டத்தைச் செயல்படுத்த 50 லட்சம் ரூபாய்கள் தேவைப்படும். இப்புனிதப் பணியின் பொருட்டு, துயர்படும் நமது உடன்பிறப்புக்களின் சார்பாக பொதுமக்களைத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி வேண்டுகிறோம். இப்பொதுப் பணிக்கு அளிக்கப்படும் உதவிகள் நன்றி யுடன் ஏற்கப்படும். இதற்கு அளிக்கப்படும் நன்கொடைக்கான இரசீது தரப்படும். செக் அல்லது டிராப்ட், ‘ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிவாரணப்பணி (Sri Ramakrishna Mission Relief) சென்னை’ என்னும் பெயருக்கு எழுதி 11, ராமகிருஷ்ண மடம் ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறோம். ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு அளிக்கப்படும் எல்லா நன்கொடைகளுக்கும் வருமானவரிவிலக்குச் சலுகை உண்டு.

சுவாமி தபஸ்யானந்தர்
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிவாரணப்பணி
சென்னை-600 004

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோ வியங்கள் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற் குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58 | பிப்ரவரி 1978 | இதழ்—2

பொருளடக்கம்

சந்தா எண் 4001 முதல் 4225 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது. அன்பர்கள் சந்தாவை உடனடியாகச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

— திருமூலர்

தொகுதி 58	பிங்கள ஹூ மாசி மீ	இதழ் 2



सर्वस्तरतु दुर्गाणि सर्वो भद्राणि पश्यतु ।
सर्वस्तद्बुद्धि-माप्नोतु सर्वस्सर्वत्र नन्दतु ।।

—महाभारतम्

ஸர்வஸ்–தரது துர்க்காணி ஸர்வோ பத்ராணி பச்யது |
ஸர்வஸ்–தத் புத்தி மாப்னோது ஸர்வஸ்–ஸர்வத்ர நந்தது ||

—மகாபாரதம்

எல்லோரும் தாண்டுவதற்கு அரிய கஷ்டங்களைத் தாண்டிச் செல்வார்களாக! எல்லோரும் மங்களங்களைக் கண்டு அனுபவிப்பார்களாக! எல்லோரும் தெய்வம் உண்டு என்ற புத்தியையும், எல்லோரும் இன்புற வேண்டும் என்ற எண்ணத்தையும் அடைவார்களாக! எல்லோரும் எல்லா இடங்களிலும் இன்புற்று வாழ்வார்களாக!

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

—குலசேகராழ்வார்

ஆன்மீக உரையாடல்

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

தமிழாக்கம்: ரா. கணபதி



அன்பின் வடிவமாய் விளங்கிய அன்னை, சீடர் ஒருவரின் கேள்விகளுக்குத் தந்த பதில்கள் இந்த இதழில் இடம் பெறுகிறது.

சீடர்: ''நல்லதம்மா, (குருமுகமாக) தீட்சை பெற வேண்டியதன் அவசியம் என்ன? தீட்சை பெறாமலேயே ஒருவன் 'காளி' 'காளி' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன? அவள் பெயரை இப்படி உருவேற்றுவதால் ஒருவன் அந்த தெய்விக அன்னையை உணரமாட்டானா?''

அன்னை: ''தீட்சை அவசியமானது. அது உடலைத் தூய்மைப்படுத்துகிறது. பகவானின் குஹ்யமான பீஜாக்ஷரத்தை ஜபிப்பதால் ஜீவன் சுத்தனாகிறான். இதுபற்றி ஒரு புராணக்கதை உண்டு. பகவானின் இருப்பிடமாகிய வைகுண்டத்துக்கு நாரதர் போனாராம். அப்போது நாரதர் தீட்சை பெற்றிருக்கவில்லை. பகவானுடன் சிறிது நேரம் பேசிவிட்டுப் புறப்பட்டார். அவர் போனவுடன் அவர் உட்கார்ந்திருந்த இடத்தைத் தூய்மைபடுத்துவதற்காக கங்கைநீரைத் தெளிக்கும்படி பகவான் லட்சுமியிடம் சொன்னாராம். 'ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? நாரதன் மகா பக்தனாயிற்றே!' என்று லட்சுமி கேட்டாளாம். 'மகா பக்தனாயிருக்கலாம்; ஆனால் அவனுக்கு இன்னம் தீட்சை ஆகவில்லையே!' என்று பகவான் பதில் சொன்னாராம். தீட்சையாலன்றி ஒருவனின் உடல் தூயதாகாது. சித்த சுத்தி, தேக சுத்தி, இரண்டுக்குமே குருமுகமான தீட்சை அவசியமாகும்.

''வைஷ்ணவர்களில் ஒருவனுக்கு தீட்சை அளித்தவுடன் 'மன்-தொர்'* என்பார்கள். மனமே சகலமும். மனம் சுத்தமானாலன்றி எதையும் சாதிக்க முடியாது. 'குரு அருள், அடியார் அருள், சாக்ஷாத் கடவுள் அருள், யாவும் இருந்தும்கூட ஒரு ஜீவன் தன் மனதின் அருளைப் பெறாததால் பிச்சை எடுத்துக் கொண்டே போகிறது'.''

சீடர்: ''நல்லது, இவ்வளவு பேர் தீட்சைப் பெற்றிருக்கிறார்களே, இவர்கள் மட்டும் என்ன அநுபவம் பெற்றுவிட்டார்கள்? (தீட்சைக்கு) முன்னேயும் பின்னேயும் ஒரே பேர்வழியாகத் தான் தோன்றுகிறார்கள்.''

அன்னை: ''தீட்சை காலத்தில் குருவானவர் குஹ்ய அக்ஷரத்தின் மூலம் ஆத்மீக சக்தியைப் பாய்ச்சுகிறார். குருவின் உள்சக்தி சீடனுக்குள்ளும், சீடனின் உள்சக்தி குருவுக்குள்ளும் பாய்கின்றன. இதனால், சீடனின் (உள்ளேயிருக்கும்) பாவங்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால்தான், தீட்சை கொடுத்ததும் குரு சுகவீனமுறுகிறார். இதனால்தான் ராக்கால் (பிரம்மானந்தர்) எவருக்கும் தீட்சை தரத் தயங்குகிறார். எவருக்கேனும் தீட்சை தந்தால், உடனே தாம் சுகவீனமுறுவதாகச் சொல்கிறார். ஆனால் சீடன் தகுதி வாய்ந்தவனாக இருந்தால், அதனால் குரு நற்பலன் பெறுகிறார். சிலருக்கு தீட்சை பெற்றவுடனேயே சட்டென ஆத்மீக விழிப்பு கைகூடுகிறது. இதெல்லாம் அவரவர் சம்ஸ்காரத்தைப் பொறுத்தது.''

---

*இதிலே ஒரு சிலேடை உள்ளது. 'மந்த்ர' என்பதை வங்காளிகள் 'மந்தொர்' என்றே உச்சரிப்பர். இதை 'மன்-தொர்' என்று பிரித்து அழுத்திச் சொல்கையில், '(உன்) மனமானது உன்னுடையதே' என்று பொருள்படும். அதாவது, 'குருவானவர் தீட்சை தந்தாலும், இனி நீ அதன் பயனைப் பெறுவது உன் மனதை நீ வசப்படுத்துவதைப் பொறுத்ததே' என்பது பொருள்.

சீடர்: ''தெய்வ தரிசனம் முதலான காட்சிகள் பார்ப்பவனின் உணர்வில்தான் உள்ளதா, அல்லது வெளியிலேயே தனி உண்மையாக உள்ளதா?''

அன்னை: ''இவை எல்லாம் அநுபவிப்பவனின் அகச்சார்பில் மட்டுமே உள்ளவை என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் நான் இந்த பௌதிகக் கண்களை வைத்துக் கொண்டே (வெளியில்) இப்படிப்பட்ட காட்சிகளைக் கண்டிருக்கிறேன். கமார்ப்புகுரில்* ஓர் இளம் பெண் பரட்டைத் தலையுடனும், கழுத்திலே மலர் மாலைகளுடனும் நான் போகிற இடங்களுக்கெல்லாம் உடன் வந்து கொண்டிருந்தாள். பேலூரில் நீலாம்பர் பாபுவின் வீட்டில் நான் கடும் விரதாநுஷ்டானங்கள் செய்தபின்தான் இந்தக் காட்சி விலகிற்று.''

''சித்தம் சுத்தமாகி விட்டால் ஏன்தான் ஒருவருக்கு ஐகாக்ரியம் (மன ஒருமைப்பாடு) சித்திக்காது? ஏன்தான் தெய்வ தரிசனங்கள் பலிக்காது? சிறிது காலம் ஜபம் அப்பியசித்த பின் ஒருவர் ஜபிக்க உட்கார்ந்தவுடனேயே, எவ்வித முயற்சியுமின்றி மந்திரம் தானாக உள்ளிருந்து எழும்புவதைக் காண்பார். (சற்றே உணர்ச்சி எழுச்சியுடன் சொல்கிறார்:) ஒருவர் மந்திரத்தைத் தினந்தோறும் பதினைந்தாயிரம் அல்லது இருபதாயிரம் தடவைகளாவது ஜபிக்க வேண்டும். அவ்விதம் செய்தால் சில பலன்கள் தெரியவே செய்யும். இது ஸர்வ நிச்சயம். தான் முன்னேறவில்லையே என்று ஒருவர் கேட்குமுன், அவர் உழைத்து ஆன்மீக சாதனங்களைப் பழகியிருக்க வேண்டும். சிறிதேனும் கவனத்துடன் ஜபம் பயின்றிருக்க வேண்டும். ஆனால் இப்படி அப்பியாசம் செய்யாமலே, 'நான் ஏன் ஆத்மீகமாக முன்னேறவில்லை?' என்று மட்டும் எல்லோரும் கேட்கிறார்கள்.''

''மிகவும் சிரமப்பட்டு ஆத்மீகத்தில் முயற்சிகள் செய்தால், அதன்பின் மனம் சுத்தமாகிறது. ஒழுங்காக அப்பியசித்தாலன்றி எதையும் பெற முடியாது. சுத்தம், அசுத்தம், இரண்டும் மனதில் இருக்கின்றன. மற்றவர்களிடம் ஒருவன் தோஷங்களைக் காண்கையில், முதலாவதாக இவன் மனமே களங்கமடைகிறது. பிறரது குற்றங்களைக் காண்பதால் ஒருவன் என்ன லாபமடைகிறான்? இதனால் தன்னைத்தானே தாக்கிக் கொள்கிறான். என் சிறிய வயதிலிருந்தே என்னால் பிறரிடம் குறைகாண முடிவதில்லை. நான் வாழ்வில் ஒருபோதும் கற்றுக்கொள்ளாத ஒன்று இதுதான். மன்னிப்பது என்பதே ஒரு மகத்தான ஆத்ம சாதனை. ஒன்று நினைவு வைத்துக் கொள்: உனக்கு மனச்சாந்தி வேண்டுமாயின் குற்றம் கண்டுபிடிப்பதை விடு. அப்படி எதனிடமாவது குற்றம் காணத் தோன்றினால், உன் தவறுகளையும் குறைபாடுகளையுமே கண்டு கொள். எல்லோரையும் உன் சொந்த மனிதர்களாகவே பாவிக்கக் கற்றுக் கொள். உனக்கு ஒருவருமே அந்நியம் இல்லை. உலகம் முழுதும் உனதே.''

* ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜன்ம ஸ்தலம்.

நரகம் எங்கே இருக்கிறது? காமம், வெறுப்பு, பொறாமை முதலிய தீய குணங்கள் குடி கொண்ட மனதில் இருக்கிறது. சுவர்க்கம் எங்கே இருக்கிறது? அன்பு, சுத்தம், திருப்தி, பெருந்தன்மை முதலிய நற்குணங்கள் நிறைந்த மனதில் இருக்கிறது. —**ஒரு துறவி**

மனச்சான்றே மனிதனுடைய இதயத்திலுள்ள கடவுளின் பிரதிநிதி ஆகும். நல்லவராக வாழ விரும்புகிறவர்கள் நல்வாழ்வு பெறுவர். தூய மனச்சான்று உடையவர்கள் மட்டுமே சுக வாழ்வு பெறுவர்.
—**சாக்ரடீஸ்**

ஒவ்வொரு நல்ல செயலும் தானமே. புன்முறுவலுடன் உங்கள் சகோதரர்களை நோக்குவதும் தானமே. உங்கள் மனிதர்களை நல்ல செயல்கள் செய்யும்படி தூண்டுவதும் தானமே. திசை தெரியாமல் அலைவோரை சரியான வழியில் கொண்டு வருவதும் தானமே. தானம் செய்யும் நல்ல மனிதன் எல்லாவற்றையும் வெற்றி கொள்வான். —**குரான் போதனை**

ஓம்

விஜயதீபம்

பக்தனும் துன்பங்களும்

பெருகிய துன்பம்

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்;
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது'

என்று மாதவி சொல்வதாக ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை கூறுகிறது.

ஒரு ஜீவன் பந்தப் பட்டுள்ளவரையில், அதனுடைய வாழ்க்கைத் துன்பத்தில் தோய்ந்து இருப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. அதே ஜீவன் பந்தங்களிலிருந்து, உலகப் பற்றுகளிலிருந்து விடுபட்டு விட்டாலோ, அழியாததாகிய பேரின்பத்தைத் தவிர வேறு எதையுமே உணர்வதில்லை. அனுபவிப்பதில்லை.

உலக வாழ்க்கை இன்பம் நிறைந்தது என்று பலர் நினைக்கலாம். ஆனால் அப்படி நினைத்துக் கொள்வதில் உண்மை எதுவுமே கிடையாது. போதுமான பரிபக்குவமும் அனுபவமும் இல்லாதவர்கள்தான் 'உலக வாழ்க்கை இன்பம் நிறைந்தது' என்று சொல்லவும் நினைக்கவும் கூடியவர்களாக இருப்பார்கள். பூனை தன்னுடைய கண்களை மூடிக் கொள்வதால் உலகமே இருண்டு போய்விட்டதாக நினைக்கலாம். மான் கானல்நீரை உண்மை என்றே நினைக்கலாம். ஆனால் பூனை கண்களை மூடிக் கொள்வதால் மட்டுமே உலகம் இருண்டு போவதும் இல்லை. மான் நினைத்துக் கொள்வதாலேயே வெறும் கானல் நீர் நீராகிவிடப் போவதும் இல்லை.

அதேபோல மாயைக்கு உட்பட்ட மனிதன் நினைத்துக் கொள்வதாலேயே, உலகம் இன்பம் நிறைந்தது ஆகிவிடாது. ஏனென்றால் உலகில் இன்பம் என்பது உண்மையில் மருந்துக்கும் இல்லவே இல்லை. இதுவே உண்மை.

மனம் தெளிவாக இருக்குமானால், உலக வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்பது தெரிய வரும். நுனிப் புல் மேய்ப்பவர்களுக்கு, அதாவது வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு, வாழ்க்கையில் இன்பம் இருப்பதாக ஒரு மயக்கம் இருக்கும். இவ்விதம் ஒருபோதுமே இல்லாத ஒன்றை இருப்பதாக நினைக்கச் செய்வது அஞ்ஞானமே ஆகும்.

சாஸ்திரங்கள் சொல்கின்றன

நமது சாஸ்திரங்கள், உலகைத் துன்ப மயமானவை என்று சொல்கின்றன. அனுபூதிமான்களும் அதையே வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதுதான் உண்மை. அதைச் சொல்வதற்குத்தான் சாஸ்திரங்களும் நமக்குத் தேவை. ஏனென்றால் நாம்தான் உலகை உண்மை என்றும் இன்பம் தருவது என்றும் நம்பிக் கொண்டிருக்கிறோமே! நமக்குத் தெரிந்தது அதுதானே! வாழ்க்கையைப் புரிந்து கொண்டு விட்டதாக அதைத்தானே நம்புகிறோம். நமது புலன்கள் அந்த அறிவைத் தானே நமக்குக் கொடுத்திருக்கின்றன!

இவ்விதம் நமக்குத் தெரிந்ததைச் சொல்வதற்கும், நமது அவித்தையை உறுதிப்படுத்துவதற்கும் எந்தவித சாஸ்திரமும் வேண்டியதில்லை. நமக்குத் தெரியாதவையும் புலன்களுக்கு எட்டாதவைகளுமான ஆன்மீக உண்மைகளைச் சொல்வதற்குத்தான், அதற்குத்

தான், அதற்கு மட்டுமேதான் சாஸ்திரங்களின் துணையும் சான்றோர்களாகிய சாதுக்களின் துணையும் அத்தியாவசியமாக நமக்குத் தேவை படுகின்றன.

உலக வாழ்க்கை துன்பம் நிறைந்ததுதான். ஆகையால்தான், 'இந்த உலகம் நிலையில்லா தது, துன்பம் தருவது' என்று சொல்கிறது கீதை. பௌத்த மதத்தவர்கள் 'ஸர்வம் துக்கம்! துக்கம், துக்கம், ஸர்வம் துக்கம்!' என்று திட்டவட்டமாக அடித்துச் சொல்லி இருக்கிறார்கள். 'விவேகியான ஒருவன் இந்த உலகம் துன்பமயமாக இருப்பதைக் காண்கிறான்' என்று யோக சூத்திரங்களைச் செய்த பதஞ்சலி மாமுனிவர் குறிப்பிட்டிருக்கிறார். 'பிறப்பும் துக்கம்; மூப்பும் துக்கம்; மனைவியும் துக்கம்; மீண்டும் மீண்டும் பிறவிக்கடலும் துக்கம். ஆகவே, ஜாக்கிரதையாக இருங்கள்; ஜாக்கிரதையாக இருங்கள்' என்று உலகின் உண்மையான நிலையை அருள்நெறிக் கதைகளில் ஒன்றாகிய 'நடு இரவில் முழங்கிய வேதாந்த முரசு' கதையில் வரும் ஜீவன் முக்தர் பறையறைந்து தெரிவிக்கிறார்.

கர்மவிதி

பிறவியையே துன்பம் என்றும், பிணி என்றும், வாழ்க்கையின் உண்மை இயல்பைத் தெளிவாகப் புரிந்துகொண்ட சான்றோர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வாழ்க்கையைத் துன்பம் என்று சொல்லுவதோடு சாஸ்திரங்கள் நின்றுவிடவில்லை. துன்ப நீக்கத்திற்கான வழிமுறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல அவைகள் தெளிவாக சொல்லியிருக்கின்றன. அவைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் மேன்மை பொருந்திய வாழ்க்கை நிச்சயம் உண்டு. கடைப்பிடிக்காமல் போனால், துன்பங்கள் அடுக்கடுக்காகத் தொடர்வதை யார்தாம் தடுத்து நிறுத்த முடியும்?

உலகில் இன்பம் தரக்கூடியவைகளாகக் கருதப்படுகிற எல்லா பொருள்களுமே, மக்கள் உட்பட எல்லா உயிர்களுமே, எந்த ஒன்றுமே நிலையானவை அல்ல. இன்பம் என்பவைகளையே ஆழ்ந்து சிந்தித்தால், அவைகள் துன்பமாகிய முடிவிடத்திலேயே நம்மைக் கொண்டு சேர்ப்பதை உணரலாம்.

துன்பங்களுக்கு ஒரு கொள்கலனாகவும், பாசறையாகவும் மட்டும்தான் வாழ்க்கை இருந்து கொண்டிருக்கிறது. வெள்ளிக் கரண்டியை வாயிலே வைத்துக்கொண்டு பிறந்தவர்களுக்கு இந்த உண்மை புரியாதுதான். அவர்களுக்குப் புரிய வைக்கவும் முடியாது. பல நூறு நோய்களுக்கு உட்பட்டு மருத்துவமனையில் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்களையும், கண்ணீரிலும் கம்பலையிலும் தத்தளித்து வாழும் குடிசை வாழ் மக்களையும் கோயிலைப் பிரதட்சணம் செய்வது போல பிரதட்சணம் செய்து 'வந்தால், உலகிலே எத்தனை எத்தனைவிதமான துன்பங்கள் மக்களைக் கசக்கிப் பிழிந்து வருகின்றன என்பது புரியும். வைராக்கியம் உறுதி பெறுவதற்கு இதுவும் ஒரு சாதனமாகச் சிலருக்கு அமையவும் கூடும்.

உலகில் இலௌகிக இன்பம் என்று கருதப் படுபவைகள்—அவைகள் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், அளவில்லாததாக இருந்தாலும்—கடவுள் சாட்சாத்காரத்தோடு ஒப்பிடும்போது துன்பம் தருபவைகளே ஆகும். அதாவது, ஆத்ம ஞானத்தோடு ஒப்பிடும்போது உலக இன்பம் அத்தனையும் நரக வாழ்க்கையாகவே இருந்து கொண்டிருக்கிறது.

தேவலோகத்தில் வாழ்பவர்கள், மனிதர்கள் இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பங்களைவிட ஏராளமான இன்பங்களை அனுபவிக்கிறார்கள். அப்படிப்பட்ட தேவர் உலகத்து வாழ்க்கையும் ஆத்ம ஞானத்தோடு ஒப்பிடும்போது, அரக்கர்களின் வாழ்க்கையே ஆகும் என்று அத்வைத வேதாந்தம் உறுதியான குரலில் சொல்கிறது. ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்து விட்டால் பிறகு அதை விஷப்பால் என்று சொல்வோமே தவிர, அருந்துவதற்குப் பயன் படுத்த மாட்டோம். ஒரு குடம் பாலைப் போலவே உலகில் இன்பம் இருப்பதாகக் கருதப் பட்டாலும், அதில் துன்பமும் விஷம் போல சேர்ந்திருப்பதால், துன்ப உலகத்தை விஷப் பாலைப் போலவே ஒதுக்கித் தள்ளிவிடு என்று வேதாந்திகள் கூறுகிறார்கள்.

துன்பங்கள் ஏன் வருகின்றன? இதற்குக் கர்ம விதியைத் தவிர வேறு எதையும் காரணமாகச் சொல்ல முடியாது.

கர்மங்களை மூன்று விதமாகப் பிரித்துச் சொல்வது மரபு. சஞ்சித கர்மம், ஆகாமிய கர்மம், பிராரப்த கர்மம் என்பவைகளே அவைகள்.

சஞ்சித கர்மம் என்பது ஏற்கனவே நாம் செய்த கர்ம வினைகளின் தொகுப்பாகும். அந்தத் தொகுப்பிலிருந்து இனி எதிர்காலத்தில் விளைய இருக்கும் நிலையிலுள்ள கர்மபலன்கள் ஆகாமிய கர்மம் எனப்படுகின்றன.

சஞ்சித கர்மத்தின் ஒரு பகுதியாக, ஏற்கனவே பலனைத் தர ஆரம்பித்து இப்போது நாம் அனுபவித்து வருபவைகள் அனைத்தும், பிராரப்த கர்மம் என்னும் பிரிவில் அடங்குகின்றன. இந்தப் பிராரப்த கர்மமே தற்போதைய நமது பிறவியை உண்டுபண்ணி இருக்கிறது. இந்தப் பிறவி முடியும் வரையிலும் அதனுடைய வேகமும் தொடர்ந்து இருந்து வரும்.

இப்போதைய நமது செயல்களும்—அவை புண்ணியச் செயல்களாக இருந்தாலும் பாவச் செயல்களாக இருந்தாலும்—நமது கர்ம வினைகளின் தொகுப்பில் சேகரிக்கப்படும். 'வேலைக்கு ஏற்ற கூலி' என்பது போல நமது கர்ம வினைகள் தமக்குரிய பலன்களை ஒரு சமயம் இல்லாவிட்டால் மறு சமயம் விளைவிப்பது நிச்சயம்.

உலகப் பற்றுள்ள மக்கள் துன்பங்கள் நேரும் சமயங்களில் கடவுளை நொந்து கொள்கிறார்கள். இதில் பொருள் ஒன்றுமே இல்லை. காரணம், நமது பழவினைகளையேதான் நாம் அனுபவிக்கிறோம். நமக்குச் சொந்தமாகாத எதுவுமே நம்மை நாடி வந்து விடாது. நமது கர்மவினை இல்லாமல் துன்பம் நமக்கு ஒருபோதும் வராது. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? நமக்குச் சொந்தம் இல்லாத பணத்தை, நாம் போட்டு வைக்காத பணத்தை, வங்கிக்காரர் நமக்குத் தூக்கிக் கொடுத்துவிட மாட்டார். துன்பங்களும் அப்படியே. பழவினை இல்லாமல் நம்மை அவை அணுகா. விரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைப்பதில்லை.

பிறவிகள்தோறும் பந்தங்கள் பெருகுகின்றன. அவைகளை அனுபவித்துத் தீர்ப்பதற்காக மீண்டும் மீண்டும் பிறப்புக்கள்; ஒழியாத தொல்லைகள். துன்பங்கள் பிறவிதோறும் தொடர்கின்றன. முடிவு இல்லாத பயணமாக பிறவிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

துன்பங்கள் தீர வழி

இந்த அவல நிலைக்கு ஒரு முடிவே கிடையாதா என்ற கேள்வி, மனிதன் சிந்திக்கத் துவங்கிய நாள் முதலாக இன்று வரையிலும் இருந்து வருகிறது. இதற்குரிய தெளிவான பதிலை நமது நாட்டில் தோன்றிய மகரிஷிகள், பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது கடவுளை அடையும்வரை, அவரை சாட்சாத்கரிக்கும்வரை, அனுபூதியைப் பெறும் வரை, கடவுளோடு இரண்டறக் கலக்கும்வரை—பிறவிகள் உண்டு; துன்பங்கள் உண்டு.அவைகள் தடுக்க இயலாதவைகள்.

'கடவுளிடம் பக்தி இல்லாத காரணத்தால் தான் மனிதன் அளவில்லாத துன்பங்களுக்கு ஆளாகிறான்' என்று ஸ்ரீராமகிருஷ்ண பகவான் கூறுவதுண்டு. துன்பங்களுக்கான அடிப்படைக் காரணத்தையும் துன்பங்களை நீக்கிக் கொள்ளும் வழியையும், அவருடைய இந்த உபதேசம் சுருக்கமாக விளக்கியிருக்கிறது.

பிறவிகளுக்கெல்லாம், துன்பங்களுக்கெல்லாம் பெரிய முற்றுப்புள்ளி கடவுள் நிலையைப் பெறுவதுதான்.

துன்பங்கள் அனைத்தையும் மூன்று பிரிவுகளின் கீழ் சாங்கிய தரிசனம் பிரித்துப் பேசுகிறது. ஆத்யாத்மீகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்வீகம் என்பவை அவை.

நமது உடலால் நமக்கு நேரும் துன்பங்கள், நமது உடலைத் தவிர வெளியுலகத்தினால் நமக்கு நேரும் துன்பங்கள், மனித சக்திக்கு அப்பாற்பட்ட பேய், பிசாசு, தேவர்கள், இராக்ஷதர்கள் முதலிய சக்திகளால் நமக்கு விளைவிக்கப்படும் துன்பங்கள் — ஆகிய விதவிதமான, நமக்குப் புரிந்தும் புரியாமலும் இருந்து கொண்டிருக்கிற எல்லாவிதமான துன்பங்களுமே, மேலே குறிப்பிட்ட மூன்று பிரிவுகளில் அடங்கி விடுகின்றன. வாசுதேவ மனனம் என்னும் அத்வைத வேதாந்த நூல் பின்வருமாறு மூன்று துன்பங்களைக் குறித்துக் குறிப்பிடுகிறது.

ஆத்யாத்மீகம்: ''உடலை ஆதாரமாக (அடிப்படையாக, மையமாக, அதிஷ்டானமாக)க் கொண்டு வரும் க்ஷய ரோகம், சீத சுரம், தாப சுரம், குன்மம், தலை நோய், அதிசாரம், வெப்பம், சூலை முதலான எல்லாவிதமான நோய்களும்; மக்கள், மிருகங்கள், பேய்கள், திருடர்கள், இராக்ஷதர்கள் முதலானவர்களால் நமக்கு உண்டாக்கப்படும் துக்கங்களும் ஆத்யாத்மீகம் என்று சொல்லப்படும்.''

ஆதிபௌதிகம்: ''ஜலம், வெய்யில், மழை, காற்று; இடி, மின்னல், பனி, கோவில், கோபுரங்கள், பிரகாரங்கள், மண்டபங்கள், சுவர்கள் போன்ற வரிசையில் உள்ள உயிர் இல்லாத பொருள்களால் விளையும் துன்பங்கள் அனைத்தும் ஆதிபௌதிகம் என்னும் பிரிவில் அடங்கும்.''

ஆதிதெய்விகம்: ''கர்ப்பந்தரித்தல், உண்டாதல், வளர்தல், நரை, திரை, அஞ்ஞானம், துர்மரணம், நாசம், பிறவி முதலியவை ஆதிதெய்விகம் என்று சொல்லப்படுகின்றன.''

இந்த மூன்று துன்பங்களும் மனிதனின் உண்மை இயல்பாகிய ஆத்மாவை ஒருபோதும் பாதிப்பதில்லை. துன்பங்கள் உடலுக்கு நேருகின்றனவே தவிர, ஆன்மாவைப் பாதிப்பதில்லை—என்று பல பிரமாணங்களின் மூலம் வேதாந்திகள் ஓயாமல் சொல்லி வருகிறார்கள். அவர்கள் சொல்வதுதான் நித்தியமாய் உள்ள பாரமார்த்திக உண்மை. ஆனால் அஞ்ஞான நிலையில் உள்ள நாம், துன்பத்தைத் தவிர வேறு எதை நடைமுறையில் அனுபவமாகப் பார்த்து வருகிறோம்?

துன்பங்கள் ஒயவும் ஆறுதல் பெருகவும், நேர்மையான வாழ்க்கையும் கடவுள் வழிபாடும் முற்றிலும் இன்றியமையாதது. ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை இந்த உலகிலும் அமைதியைத் தரும். மறு உலகிலும் அழியாத பேரின்பத்தைப் பெறச் செய்யும்.

வேத வாக்கு :

ஒருவனே தேவன்

'அண்ணா' சுப்ரமண்யம்

அக்னிதேவனே! வீரர்களுள் வீரனாகிய இந்திரன் நீயே. ஓங்கி உலகளந்த உத்தமனான விஷ்ணு நீயே. வேதத்திற்கு உறைவிடமான பிரம்மதேவன் நீயே. வருணன் நீயே, மித்ரன் நீயே, அர்யமா நீயே, அதிதியும், பாரதியும், இளாதேவியும், ஸரஸ்வதி தேவியும் நீயே.

—ரிக்வேதம் 2-1

தேவர்களே! நீங்கள் எல்லோரும் இந்திரனிடம் உறைகிறீர்கள் என்பது உங்களுடைய பிரியமான பெரும் புகழ். **—ரிக் 3-54-17**

இந்திரனே! நீ பேராற்றல் படைத்தவன்; எல்லா தேவர்களையும் உன்னிடம் கொண்ட விச்வதேவன். **—ரிக் 3-98-2**

நம்முடைய துதிகளால் நாம் இன்று ஸவித்ரு தேவனைப் போற்றுகிறோம். அவன் மங்கள நாயகன், விச்வதேவன்; அவனுடைய சக்தி உண்மையில் உறைகிறது. **—ரிக் 5-82-7**

ஸவித்ரு தேவனாகிய அவனே அர்யமா, அவனே வருணன், அவனே ருத்ரன், அவனே மகாதேவன்; ஒன்றேயாகிய தெய்வம் அவனே. அவனை இரண்டாவதாகவோ, மூன்றாவதாகவோ, நான்காவதாகவோ, ஐந்தாவதாகவோ, ஆறாவதாகவோ சொல்லவில்லை.

பிரபுவே! உன்னிடம் எண்ணிலடங்காத மூர்த்திகள் உறைகின்றனர். உன்னுடைய கோடியில் எத்தனையோ கோடிகள் அடக்கம். நீயே கோடானுகோடியாக விளங்குகிறாய்.

—அதர்வண வேதம் 13–4

இந்திர-வருணனே! எங்கள் துதிகளின் வாயிலாக உன்னையும் உனது அருளையும் நாடும் எங்களுக்குப் புகலளிப்பாயாக. **—ரிக் 1-17-7**

இந்திரனும் அக்னியுமாகிய நீங்கள் இருவரும் உங்களுடைய ஸத்ய ஸ்வரூபத்தால் எங்களைக் காத்தருளுங்கள். **—ரிக் 1-21-6**

தேரில் அமர்ந்து வரும் இரண்டு வீரர்களைப் போலவும், மக்களிடையே மதிமிக்க மணமக்களைப் போலவும், விடியற்காலையில் இரண்டு சக்கரவாகப் பறவைகளைப் போலவும் எங்களை நோக்கி எழுந்தருளுங்கள். **—ரிக் 2-39**

மருத் கணங்கள் தங்கள் துதிகளால் மதிமிக்க ரிஷிகளைப் போலும், மக்களைக் காக்கும் களங்கமற்ற வீரர்களைப் போலும், புத்தியில் சிறந்த வழிகாட்டிகள் போலும், பரிசுகளை தாராளமாக வழங்கும் மணமக்களைப் போலும், அழகிய தாய்மார்களை உடைய விளையாட்டுக் குழந்தைகளைப் போலும், படாடோபத்துடன் போருக்குச் செல்லும் வீரியம் மிக்க போர் வீரர்களைப் போலும் எத்தனையோ வகையில் போற்றுதற்குரியவர்கள் ஆகின்றனர்.

—ரிக் 1-78

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

திருமுருக கிருபானந்தவாரியார்

13-11-77 ஆம் நாள் ஆர்க்காட்டில் நடைபெற்ற, ஸ்ரீராமகிருஷ்ண–விவேகானந்த மன்றத்தின் ஆண்டு விழாவில் வாரியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

பதினெட்டாம் நூற்றாண்டு மிக அற்புதமான நூற்றாண்டு. அந்த நூற்றாண்டில்தான் மிகுந்த எண்ணிக்கையில் மகான்கள் தென் நாட்டில் தோன்றினார்கள்.

ஆறுமுக நாவலர், தியாகராசர், இராமலிங்க சுவாமிகள் என்று தமிழ்நாட்டில் பலர் தோன்றினர். அதேநேரத்தில் வட இந்தியாவில் தோன்றிய மிகப் பெரிய மகான், ஞானி, பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

காளி உபாசகர்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் மிகச் சிறந்த காளி உபாசகர். மிகப்பெரிய மகான்கள் பலரும் காளி உபாசகராகவே இருந்திருக்கிறார்கள். காளிதாசர், அபிராமிபட்டர் முதலியவர்களை உதாரணமாகச் சொல்லலாம்.

இவர்களைப் போலவே ஸ்ரீராமகிருஷ்ணரும் காளி உபாசகராகவே இருந்தார். அருணகிரிநாதர் கூடக் காளியைப் பற்றி மிக அற்புதமாகப் பாடி இருக்கிறார்.

மற்றவர்கள் காளியை உபாசனை செய்ததற்கும் ஸ்ரீராமகிருஷ்ணர் காளியை உபாசனை செய்ததற்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் காளியைக் கோயிலில் மட்டும்தான் கண்டார்கள். ஆனால் இவரோ உலகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்களிடமும் காளியைக் கண்டார். இதற்கும் மேலாகத் தன் மனைவியிடமே காளியைக் கண்டார்.

உலகத்தில் எத்தனையோ மகான்கள் பிறந்திருக்கிறார்கள்; எவ்வளவோ சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையைப் போல ஒருவருமே வாழ்ந்ததில்லை. சத்தியமாகச் சொல்லுகிறேன், மீண்டும் சத்தியமாகச் சொல்லுகிறேன், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போல ஒருவருமே வாழ்ந்ததில்லை.

மூன்று ஆசைகள்-விசுவாமித்திரர்

மனிதர்களை அழிவிலே கொண்டு போய் சேர்க்கிற ஆசைகள் மூன்று. அவை மண்ணாசை, பொன்னாசை, பெண் ஆசை. இதில் தான் எல்லோரும் வீழ்ந்து விடுகிறார்கள். பெரிய தவசிகள், முதல் இரண்டு ஆசைகளை வென்று விடுகிறார்கள். ஆனால் மூன்றாவது ஆசையில்தான் வீழ்ந்து விடுகிறார்கள்.



விசுவாமித்திரரை எடுத்துக் கொள்வோம். எவ்வளவு பெரிய தவசி! மிகச் சிறந்த தவசிகளிலேயே மிகமிகச் சிறந்த தவசி அவர். வேதத்திலே இருக்கும், நாமெல்லாம் நாள்தோறும் ஜபிக்கும் காயத்ரி மந்திரத்தைக் கண்டு பிடித்தவர். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று போற்றப்பட்டவர்.

அப்படிப்பட்டவர் கடுமையான தவம் செய்து கொண்டிருக்கிறார். மேனகை வந்தாள். கடுமையான தவத்துக்கிடையிலும் அவள் தன்னைப் பார்க்கும்படி செய்தாள். விசுவாமித்திரர் அவளையும், அவள் அழகையும் பார்த்தார். அவள் அழகில் மயங்கி அவளோடு குடும்பம் நடத்த ஆரம்பித்துவிட்டார்! ஒரு பெண் குழந்தை பிறக்கிற வரைக்கும் குடும்பம் நடத்திக்கொண்டே இருந்தார். கடைசியில் ‘குழந்தையைப் பிடியுங்கள்’ என்று அவள் சொல்லிய

போது, 'இது என் குழந்தையல்ல! ஆ, ஊ' என்று கத்த ஆரம்பித்துவிட்டார். பெரிய தவசிக்கே இந்த கதி!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்படி யாரோ மேனகையைக் கண்டு அல்ல; தன் சொந்த மனைவியை நல்ல பருவத்தில், தனிமையில், இரவு நேரத்தில், தன் பக்கத்திலேயே, படுத்துக் கொண்டிருக்கிற மனைவியைக் கண்டு கூட மயங்கவில்லை. அதனால்தான் அவர் உலகத்தில் பெரிய மகானாகப் போற்றப்படுகிறார். இந்தியாவில் மட்டுமா போற்றப்படுகிறார்? இல்லை. உலகம் முழுவதும் போற்றப்படுகிறார்.

அவர் கண்ணுக்கு மனைவி என்று ஒன்று இந்த உலகத்தில் தென்படவே இல்லை. எல்லாம் ஜகன் மாதாவாகவே தெரிந்தார்கள். எப்படி?

கணேசரும் உமாதேவியும்

ஒரு கதை உண்டு. ஒருமுறை விநாயகப் பெருமான் தன் தாய் உமாதேவி வீட்டிற்குள் இருக்கும்போது, தான் மட்டும் வீட்டிற்கு வெளியே வந்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது பூனைக்குட்டி ஒன்று அங்கே வந்து அங்கும் இங்கும் கத்திக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தது.குழந்தைக் குறும்பில் அதைப் பிடித்து அடி அடி என்று அடித்துத் துரத்தி விட்டார். கைகளால் முகத்தில் பிறாண்டி விட்டார். இரத்தம் கூட வந்துவிட்டது. பூனைக் குட்டி மியா மியா என்று கத்திக்கொண்டே ஓடி விட்டது.

கொஞ்ச நேரத்திற்குள் வீட்டிற்குள் நுழைந்தார். அங்கே அம்மாவின் முகத்தைப் பார்த்ததும் அங்கே கீறல்கள்! இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது! துடித்துப்போனார். ''தாயே! யார் இதைச் செய்தது? யார் இதைச் செய்தது?'' என்று கோபத்தோடு கேட்டார்.

தேவி புன்னகையோடு, ''யாருமில்லை மகனே! நீதான் என்னை இப்படிச் செய்தாய்'' என்றார். இதைக் கேட்டதும் விநாயகர் திடுக்கிட்டுப் போனார். ''நான் செய்யவில்லையே'' என்றார். உமாதேவி, ''நீதான் செய்தாய். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வெளியே ஒரு பூனைக் குட்டியை அடித்து முகத்தில் இரத்தம் கசியும்படி செய்தாய் அல்லவா? அதன் முகத்தில் விழுந்த அடிதான் இப்படி என் முகத்தில் விழுந்திருக்கிறது. பூனையின் முகத்தில் விழுந்த கீறல்கள்தான் இங்கே என் முகத்தில் இருக்கின்றன'' என்றார்.

''நான் பூனையை அடித்த அடிகள் உங்கள் முகத்தில் விழுந்தனவா? எப்படி தாயே?'' என்றார். அதற்கு உமாதேவி, ''மகனே! இந்த உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் நான் தான். நான்தான் அத்தனை வடிவங்களாகவும் இருக்கிறேன். அவைகளில் நீ எதைத் துன்புறுத்தினாலும் நீ என்னைத் துன்புறுத்துகிறாய். இதை நீ நினைவில் வைத்துக்கொள்'' என்றார்.

விநாயகர் மனத்தில் உமாதேவி சொல்லிய இந்த உண்மை மிக ஆழமாகப் பதிந்து விட்டது. உலகத்தில் உள்ள ஒவ்வொரு உயிரும் தன் தாய் உமாதேவிதான் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டார். உலகத்தில் இருக்கும் எல்லாப் பெண்களும் அவருக்குத் தாயாகவே தெரிந்தார்கள். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் எல்லாப் பெண்களும் அப்படியேதான் ஜகன் மாதாவாகத் தெரிந்தனர்.


(தொடரும்)

நீ உன் ஆசையை உன் கைக்குள் அடங்கும் கைத்தடியாக வைத்திரு. செங்கோலாக்கி விடாதே; அது உன்னையே ஆட்சி செய்துவிடும். மூன்று கற்கள் சேர்ந்தால் சுமைதாங்கி; அது கூட மனிதனுக்கு உதவி செய்யும்போது, மனிதனாகப் பிறந்த நீ ஏன் உதவி செய்யத் தயங்குகிறாய்?

—ஓர் அறிஞர்

உன் அருமையான நேரத்தை வீண்வம்பு பேசுவதிலும், மற்றவரை இகழ்வதிலும் கோள் சொல்வதிலும் கழித்து பாழாக்காதே. மற்றவர்களுடைய நன்மைக்காகவும், அமைதிக்காகவும், இன்பத்துக்காகவும் வாழ்வதே உன் இலட்சியமாக இருக்கட்டும். மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்கள் இதயத்தில் வாழும் இறைவனை வழிபடுகிறாய்.

—ஒரு துறவி



பேரரசன் பெற்ற படிப்பினை!

அ. லெ. நடராஜன்

> பதவியைக்கொண்டு அதிகாரம் செலுத்தலாம். ஆனால் அது அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுக்காது. ஆனந்தமும் அமைதியும் பெற வேண்டுமானால் பதவியில் பற்றுதல் கூடாது—என்னும் உண்மையை சித்தரிக்கும் நிகழ்ச்சி இங்கே தரப்படுகிறது.

ஒருமுறை பேரரசன் அலெக்சாண்டர், தான் பிரயாணம் செய்த சமயம் ஏழை எளிய மக்கள் ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதைக் கண்டான்.

அந்தக் கூட்டத்தினர் எளிய வாழ்க்கை வாழ்ந்தார்கள். தம் வீட்டுக்குப் பக்கத்திலேயே இறந்தவர்களைப் புதைத்தார்கள். ஆடம்பரமோ பகட்டோ எதுவும் அவர்களிடம் தென்படவில்லை. எளிய உணவையே அவர்கள் உண்டார்கள். ஆயினும், தாம் வாழும் குடிசைகளையும் சுற்றுப்புறங்களையும் அவர்கள் சுத்தமாக வைத்திருந்தார்கள்.

அலெக்சாண்டர் இவர்களின் நிலையைக் கண்டு அதிசயித்தான். தன் சிப்பந்தி ஒருவனை அனுப்பி, அவர்களின் தலைவனைத் தன்பால் கூப்பிட்டான்.

அலெக்சாண்டர் கூப்பிட்டு அனுப்பியதை அவர்கள் தலைவன் பொருட்படுத்தவில்லை. ''உங்கள் அரசரைப் பார்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை'' என்று சொல்லி, அழைக்க வந்த சிப்பந்தியை அவன் திருப்பி அனுப்பி விட்டான்.

ஆகவே அலெக்சாண்டர் நேரே அவனிடம் சென்றான். அந்தக் கூட்டத்தாரின் தலைவனை அணுகி, ''உங்கள் வாழ்க்கை நிலை ஏதோ ஒரு விதமாக இருக்கிறதே! உங்களிடம் தங்கம், வெள்ளி, ரத்தினம் எதையும் காணோமே? எந்த வித வாழ்க்கை வசதிகளும் உங்களிடம் இல்லையே, திருப்தியாக நீங்கள் வாழத்தான் செய்கிறீர்களா?'' என்று கேட்டான்.

''உலக இன்பங்களை ஆசை தீர அனுபவித்து முடிக்க யாராலும் முடியாது!'' என்று தலைவன் பதில் சொன்னான்.

''நீங்கள் ஏன் புதை குழிகளை வீட்டின் வாயிலில் வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அலெக்சாண்டர்.

''எப்போதும் எங்கள் கண் பார்வை இறந்தவர்களின் புதை குழி மீது படவேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் செய்து வருகிறோம். புதை குழியை அடிக்கடி பார்ப்பதால் சாவு மனிதனுக்கு உண்டு என்ற எண்ணம் நெஞ்சத்தைவிட்டு நீங்காமல் இருக்கும். மறு உலகம் ஒன்று உண்டு என்பதும் சதா நினைவில் இருக்கும். அதனால் இந்த உலகத்தின் மீது கொண்டுள்ள பற்றுதல் குறையும். எல்லாம் வல்ல இறைவனை நினைந்து தொண்டு செய்யத் தூண்டும்'' என்று எளியவர் தலைவன் பதில் சொன்னான்.

''நீங்கள் ஏன் புல்லைத் தின்னுகிறீர்கள்?'' என்று கேட்டான் அலெக்சாண்டர்.

''மற்ற உயிர்களுக்குப் புதை குழிகளாக எங்கள் வயிற்றை ஆக்கிக் கொள்ளும் விருப்பம் எங்களுக்கு இல்லை. அவை தருகின்ற இன்பம் தொண்டை அளவில் நின்று போய்விடுகிறது'' என்று தலைவன் பதில் சொன்னான்.

பிறகு தன் கையை நீட்டி, மனித மண்டை ஓடு ஒன்றை எடுத்து, அந்த மனிதன் போட்டான். ''அலெக்சாண்டர் அவர்களே! இது யாருடைய மண்டை ஓடு என்பது தங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் தலைவன்.

''தெரியாது'' என்று பதில் சொன்னான் அலெக்சாண்டர்.

''அரசர் அனைவருக்கும் அரசனாக விளங்கிய பேரரசன் ஒருவனின் மண்டை ஓடு இது. இந்த அரசன் கொடுங்கோலனாக இருந்தவன். குடி மக்களை வஞ்சித்தவன்; செல்வத்திலும் பகட்டிலும் புரண்டு திளைத்தவன்; அடக்கமோ கட்டுப்பாடோ இன்றி ஆசை வயப்பட்டு அலைந்தவன்; நாடு பிடிப்பதையே தன் நாட்டமாகக் கொண்டு, அதில் திவிர ஊக்கம் காட்டியவன்'' என்று சொன்னான்.

பிறகு மீண்டும் ஒருமுறை கையை நீட்டி வேறு ஒரு மண்டை ஓட்டை எடுத்து, அலெக்சாண்டர் முன்பு அந்த மனிதன் வைத்தான். ''இது யாருடைய மண்டை ஓடு என்பது உமக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியாது'' என்று பதில் சொன்னான், உலகம் முழுவதிலும் வெற்றிக்கொடி நாட்டி விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அலெக்சாண்டர்.

''நீதிமானாய் இருந்த அரசர் ஒருவரின் மண்டை ஓடு இது. குடிமக்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரிடமும் நேர்மை தவறாமலும் அன்பாகவும் நடந்துகொண்டவர் இவர். ஆண்டவனின் அன்புக்குப் பாத்திரமாகி அவருடன் இருப்பவர் இவர்'' என்று சொன்னான் தலைவன்.

பிறகு அலெக்சாண்டரின் தலையில் தன் கையை வைத்து, ''இவர்கள் இருவரில் உமது மண்டை ஓடு எந்த வகையைச் சேர்ந்ததோ தெரிய வேண்டும்'' என்று சொன்னான் அந்த மனிதன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தலைவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு அலெக்சாண்டர் தேம்பித் தேம்பி அழுதான். பிறகு அவனை நோக்கி, ''நீங்கள் விரும்பினால் என்னோடு வாருங்கள்; உம்மை உயர்ந்த மந்திரி பீடத்தில் அமர்த்துகிறேன். இருவரும் சேர்ந்து உலகம் முழுவதையும் பரிபாலிக்கலாம்'' என்று சொன்னான்.

''வேண்டவே வேண்டாம். அதிகாரத்தில் எனக்கு நாட்டம் இல்லை'' என்று அந்த மனிதன் மறுத்து விட்டான்.

''நீங்கள் ஏன் மந்திரி பதவியை வேண்டாம் என்று மறுக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அலெக்சாண்டர்.

''நீங்கள் வெற்றி கொண்ட உலகங்களும் உம்மிடம் குவிந்து கிடக்கும் செல்வமும், மனிதர்களை உமக்குப் பகைவன் ஆக்கி இருக்கின்றன. எளிமையும் திருப்தியும் கடவுள் பக்தியும் எங்களிடம் இருப்பதால் மக்கள் எங்களை நேசிக்கிறார்கள். இது ஒன்றே எங்களுக்குப் போதும். எங்களுக்குப் பதவியும் வேண்டாம்; வீண் பகட்டும் வேண்டாம்; பணமும் வேண்டாம்''என்று தெரிவித்துக் கொண்டான் தலைவன்.

அலெக்சாண்டர் மீண்டும் தலைவனை மார்போடு அணைத்துக் கொண்டான். ''அத்தகைய பாக்கியம் இந்த ஏழைக்குக் கொடுத்து வைக்கவில்லை'' என்று சொல்லி அந்த ஏழையிடம் விடைபெற்றுக் கொண்டான்.

மதம் ஒன்று இல்லாத தேசம், எல்லா அலங்காரங்களும் பூர்த்தி செய்யப்பட்டு கர்ப்பக் கிருகம் இல்லாத கோயிலைப் போன்றது.

—ஹேகல்

மனதின் உத்தரவில்லாமல் எந்த விஷயமும் கைகூடாது. ஆத்ம சாதனம் பழகும் போது மனதின் கூட்டுறவு மிகவும் அவசியம். கர்மத்தில் ஈடுபடாதவரையிலும் மனதின் சோதனைக்கு இடமில்லை. பொழுது புலரும்போது மனம் அமைதியாய் இருக்கிறது. ஆனால், குழந்தை சிறிது அழுதால் அப்போது மனதுக்குள்ள மதிப்பு தெரிந்துவிடுகிறது. சுத்தமாயுள்ள தண்ணீரில் கல்லைப் போடுங்கள்; அதன் அடியிலுள்ள சகதி மேலே வரும். நமது மனதின் நிலையும் அத்தகையதே. நமக்குக் கோபம் வரும்போது மனதில் உள்ள சக்தியின் குணம் தெரியும். கர்மம், நமது சொரூபத்தைக் காட்டும் கண்ணாடியாகும். ஆதலால் கர்மம் செய்துகொண்டே மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும். மனதின் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு கர்மம் பேருதவி செய்கிறது.

—வினோபா பாவே

மனித வடிவில் தெய்வங்கள்

ஏ. சுப்பிரமணியம், எம்.ஏ.

ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகானந்த மன்றம், ஆர்க்காடு.

உலகத்தில் உள்ள சமயங்களிலேயே அவதார தத்துவத்தில்—தெய்வங்கள் மனித வடிவில் வருகிறார்கள்; மனிதர்களோடு மனிதர்களாக வாழ்கிறார்கள்; மனித வாழ்வைத் தெய்வத் திருக்கோயில்களை நோக்கித் திருப்புகிறார்கள்—என்ற தத்துவத்தில் மூழ்கிக் கிடக்கும் ஒரே சமயம் இந்து சமயம்தான்.

இந்து சமயத்தில் இன்று நிலவும் வழிபாடுகளையும், வாழ்த்துக்களையும், படையல்களையும் நிறுத்தி விடுங்கள்! இந்து சமயம் உயிர் வாழும். இந்து சமயத்தின் உயிர்நாடி என்று போற்றப்படும் வேதங்களையும், ஞான நூல்களையும், புராணங்களையும் இந்து சமயத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடுங்கள்! இந்து சமயம் உயிர் வாழும்.

> இதயத்தை நெகிழச்செய்து, ஆழ்ந்து நம்மை சிந்திக்க வைக்கும் தரம் வாய்ந்த அரிய ஒரு கட்டுரை இது.

ஆனால், அவதார தத்துவத்தை—தெய்வம் மனித வடிவில் வந்து உலகத்தை வாழ வைக்கிறது என்ற தத்துவத்தை—இந்து சமயத்தில் இருந்து நீக்கி விடுங்கள். அதன் பிறகு இந்து சமயம் ஓர் இரண்டாயிரம் ஆண்டுகள் கூட உயிர் வாழாது. இந்து சமயம், சநாதன தருமம்



—அழிவே இல்லாத நிலையான தருமம்—என்று போற்றப்படுவதற்குக் காரணமே மனித வடிவில் வரும் இந்த அவதாரப் புருஷர்கள்தாம்.

'ஐந்தே ஐந்து இந்துக்கள் உயிரோடு இருந்தால் கூட இந்து சமயம் உறுதியாக வாழும்' என்று பதினெட்டாம் நூற்றாண்டில் இந்து சமயத்தை வாழ வைக்கவே உடல் எடுத்த மகான் சுவாமி விவேகானந்தர் கூறியபோது கூட, 'சீதை என்னும் அவதாரத் தாய் அந்த ஐந்து பேருடைய இதயங்களில் வாழும் வரைதான் இந்து மதம் வாழும்' என்று கூறி இருக்கிறார்.

எப்பொழுதெல்லாம் உலகில் தர்மம் குலைந்து அதர்மம் அதிகரிக்கிறதோ, அப்பொழுதெல்லாம் மனித வடிவில் தெய்வங்கள் இந்தப் பூமிக்கு வருகின்றன.

'அர்ச்சுனா! எவ்வெப்போது தர்மத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு எழுச்சியும் உண்டாகிறதோ, அவ்வப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன். நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்'' என்பது அவதாரபுருஷன் கண்ணனின் வாக்கு.

மாயாவாதம் என்னும் ஒரு மறைப்பு இந்த இந்திய மண்ணை மூடிக் கொண்டபோது, அதை துரத்தத் தென்திசையில் தோன்றி, மூன்று வயதிலேயே முத்தமிழ் வித்தகராய்த் 'தோடுடைய செவியன் விடையேறி' எனப் பாடத் துவங்கி, நாளும் தமிழ் வளர்த்துத் தமிழோடு ஞானத்தை வளர்த்து, இந்து சமய தர்மத்தையும் வளர்த்த திருஞான சம்பந்தர் இப்படி மனித வடிவில் வந்த ஒரு தெய்வம்தான்.

அரசன் தன்னைப் பற்றிப் பிடித்து வந்து பாறையோடு பாறையாகக் கட்டிக் கடலுக்குள் கொண்டுபோய் இறக்கிய போதும்,

''கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே''

என்று நமச்சிவாயத்தைத் தவிர வேறு துணையை நாடாமல், தனக்கும் தர்மத்திற்கும் வந்த தடைகளையெல்லாம் திருப்பணி ஒன்றாலேயே நீக்கி, ஊர் ஊராகக் கோயில்தோறும் புல், பூண்டுகளைக் களைந்து, மலர்ச்செடி நட்டு, மகாதேவன் வழிபாட்டைப் புதுப்பித்து, மலர்தூவி அருச்சனைகளைத் துவங்கி, இந்து சமயத்தைத் தமிழ்த்திரு நாட்டில் வளர்த்தாரே, திருநாவுக்கரசர், அவரும் மனித வடிவில் வந்த தெய்வம் தான்.

தென் இந்தியாவின் தென் கோடியில் ஒரு தாய்க்கு ஒரே மகனாகப் பிறந்து, பாலின் சுவை

யும் தாயின் சுவையும் அறிய வேண்டிய அந்த இளம் பருவத்தில் சன்னியாசியாகி,

மாதா பார்வதி தேவீ, பிதா தேவோ மஹேஸ்வர: |
பாந்தவ்யா சிவபக்தாஸ் ச ஸ்வதேஸே புவனத்ரய: || *

என்று கூறிக்கொண்டு குமரிமுதல் இமயம்வரை நடந்து, இருபது வயதுக்குள் இந்து சமயத்தின் இதய நரம்புகளான பிரம்ம சூத்திரத்திற்கும், கீதைக்கும் உரை எழுதி, புத்த மதத்தின் சிதைவுகளாய் இந்த நாட்டை மூடிக் கிடந்த பல்வேறு மயக்க மதங்களை அகற்றி வேதாந்தக் கொடியை விண்உயர உயர்த்திய மகான் சங்கரரும் மனித வடிவில் வந்த தெய்வமேதான்.



எந்தப் பெயரைச் சொல்லிக் கொண்டு இன்று ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் தங்கள் வீட்டையும், வாசலையும், சொத்து சுகங்களையும், உற்றார் உறவினர்களையும் துறந்து, காவி உடை அணிந்து, உலகத்தின் ஏக்கப் பெருமூச்சுக்களும், வேதனைக் குரல்களும், கண்ணீர் வெள்ளங்களும் வடியும் இடங்களைத் தேடி ஆறுதல் தர நடந்து கொண்டிருக்கிறார்களோ . . . .

எந்தப் பெயரைச் சொல்லிக்கொண்டு எண்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் இளைஞர், தான் இதுவரை கற்பனையில் கூடக் காணாத ஒரு நாட்டை நோக்கி, நாலாயிரம் மைல்களுக்கு அப்பால், ஆறு கடல்களைத் தாண்டி, கையில் காசு இல்லாதவராய், கடன் கேட்கவும் ஆள் இல்லாதவராய் இந்து சமயத்தை உலகச் சமயங்களின் பேரவைக்கு அழைத்துச் செல்ல கப்பல் ஏறினாரோ . . . . .

முன்பு இராமராகவும் கிருஷ்ணராகவும் வடிவம் தாங்கி வந்து, இந்த இந்தியப் பூமியில் தர்மத்தை நிலைநிறுத்திய தெய்வம், அந்தத் தர்மம் பரிதாபமாகக் குலைந்து போன இந்தப் பதினெட்டாம் நூற்றாண்டில் எந்த மனித வடிவில் வந்ததோ . . . . . .

எந்தக் காலத்திலுமே இந்து தர்மம் நிலை குலைந்து போகாத வகையில் நிலை குலைந்த காலத்தில் . . . .

எந்தக் காலத்திலும் தான் ஓர் இந்து என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படாத இந்து, தான் இந்து என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்படும் அளவு பேடியாகிப் போன காலத்தில் . . . .



இந்து சமயத்தில் மனித மனதை படிப்படியாக உருவமற்ற பரப்பிரம்மத்திடம் கொண்டு போய் சேர்க்கும் முயற்சியின் முதல் படியாக, இந்து ஞானிகள் உருவாக்கிய உருவ வழிபாட்டைக் காட்டுமிராண்டி வழிபாடு என்று ஒதுக்கிக் கேலிபேசும் அளவு, இந்துக்களின் மனதில் புல், பூண்டு முளைத்துத் தேளும் பாம்பும் நடனமாடத் துவங்கிவிட்ட காலத்தில் . . . .

'கடவுளை இந்த உலகத்தில் கண்டவர்கள் யார்? கண்டிருந்தால் அவர்கள் எங்களுக்குக் காட்டட்டும். கண்ணால் கண்டதை மட்டுமே நம்புவோம். காரண காரியங்களுக்கு உட்பட்டவைகள் மட்டுமே எங்கள் மூளைக்குள் ஏறும்' என்று பேசிக்கொண்டு, விஞ்ஞான மூளைகள்

*என்னுடைய மாதா பார்வதிதேவி; தந்தை மகேஸ்வரர்: பந்துக்களோ சிவபக்தர்கள்: சொந்த இடம் (வீடு) இந்த மூன்று உலகங்களும்.

பரிசோதனைக் குழாய்களைக் கையில் எடுத்துக் கொண்டு கடவுள் எங்கே எங்கே என்று திரிந்து கொண்டிருந்த காலத்தில்........

''என் குழந்தைகளே! இங்கே வாருங்கள்! நான் கடவுளைக் கண்டிருக்கிறேன். இப்போது நான் உங்களை என் கண்களால் எப்படித் தெளிவாகப் பார்க்கிறேனே அதைவிடத் தெளிவாகப் பார்த்திருக்கிறேன். என் பின்னுல் வாருங்கள். நான் செய்வதைப் போல் செய்யுங்கள். நான் கடவுளைக் காண பதினறு அணு உழைப்பு உழைத்தேன். நீங்கள், என் அருமைக் குழந்தைகளாகிய நீங்கள் ஓர் அணு உழைப்பு உழைத்தாலே போதும். கடவுளை நீங்கள் காண்பீர்கள்'' என்று தன்னிடம் வந்தவர்களை எல்லாம் அன்புப் பொங்க வருந்தி வருந்தி அழைத்து,....

கடவுள் என்பது என்னவோ இல்லாத ஒன்று என்றும், காண முடியாத கற்பனை என்றும், அதிகம் படித்த அப்பாவிகள் எழுதி அடுக்கிய சாஸ்திர விளக்கங்களை யெல்லாம் நடுத்தெருவில் தூக்கி எறிந்து, கடவுள்களை அவர்களின் இதயப் பீடத்தில் ஏற்றி வைத்தாரே, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அவரும் மனித வடிவில் வந்த தெய்வமேதான்.

அந்தப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களைத் தன் நினைவு, நெஞ்சம், உடம்பு இவைகளின் அணுக்கள் ஒவ்வொன்றிலும் ஏற்றி நிறைத்துக்கொண்டு, இந்தியாவில் ஒரு நாய் கூட பசியோடு இருக்கும் வரையில் அதன் பசியைத் தீர்ப்பதுதான் என் சமயம் என்று முழங்கி, இந்திய மக்களை அறியாமைச் சேற்றிலும், அடிமைத் தளையிலும் இருந்து மீட்பதற்காக........

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சுற்றி அலைந்து, பொருள் தேடி, கங்கைக் கரையில் தேவாலயமும் அறிவாலயமும் அமைத்து, அடிமை ஆட்சியால் சொரணையே இல்லாது கிடந்த இந்த நாட்டு மக்களுக்குத் தன் உணர்வை ஊட்டுவதற்காகவே தன் உடம்பையே எரித்துக்கொண்டு, நாற்பதாம் வயது தொடங்குவதற்கு முன்பே தன் திருஉடலைப் பேலூர் தேவாலயத்தில் உயிரற்ற உடலாகக் கிடத்திக்கொண்டாரே தியாக மூர்த்தி விவேகானந்தர், அவரும் மனித வடிவில் வந்த தெய்வமேதான்.

இந்த உலகத்தின் நிலையான சொத்துக்கள் இந்தத் தெய்வங்கள்தாம். மழையாலும் வெய்யிலாலும் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. இந்தத் தியாக மூர்த்திகளால் தான் உலகம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் பார்வை இந்தப் பூமியிலே பட்டுக் கொண்டிருப்பதால்தான் வானம் மழை



பெய்கிறது; சூரியன் சூட்டைத் தருகிறுன்; மரங்களும் கொடிகளும் செழித்து வளர்கின்றன. இவர்கள் காலடிகள் படுவதால்தான் இந்தப் பூமிக்குள் பொன்னும் வைரமும் புதைந்து கிடக்கின்றன.

'நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்று புறநானூறு இந்த உலகம் எந்த மன்னர் காவல் மட்டுமே வாழுகிறது என்று கூறுகிறதோ, அந்த மன்னர்கள் இவர்கள்தாம்.

சில பண்பாளர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் மண்ணில் விழ்ந்து மடிந்து பேகாமல் இருக்கிறது என்று திருவள்ளுவர்,

''பண்புடையார் பட்டுண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்ற குறளில் சொல்லுகிருரே,

உலகம் மண்ணில் விழ்ந்து அழியாமல் காப்பாற்றும் அந்தப் பண்பாளர்கள் இவர்கள்தாம். இவர்கள் மூச்சு விடுவதால்தான் உலகம் மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. இவர்கள் வாழ்வதால்தான் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆனுல் இறைவா!

இந்த மனித தெய்வங்களுக்கு எல்லாம் நாங்கள் என்னென்ன கொடுமைகளைச் செய்திருக்கிறோம்!

1977 ஆண்டுகளுக்கு முன்னுல் பாலஸ்தீனத்தில் யூத இனத்தில் தோன்றிய ஏசுவை யூதர்கள் ஒரே ஒரு முறைதான் சிலுவையில் அறைந்தார்கள். ஆனுல் இந்துக்களாகிய நாங்களோ, எங்கள் ஏசுக்களை ஒவ்வொரு விநாடியும் சிலுவையிலே அறைந்து கொண்டிருக்கிறோம்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னுல் அரேபியாவில் பிறந்த தேவதூதன் நபிநாயகத்தை, அரேபியர்கள் ஒரே ஒருமுறைதான் மெக்காவில் இருந்து மதினு வரை கல்லால் அடித்துத் துரத்திக்கொண்டு போனுர்கள். ஆனுல் இந்துக்காளகிய நாங்களோ, எங்கள் நபிநாயகங்களை ஒவ்வொரு விநாடியும் இங்கே கல்லால் அடித்துத் துரத்திக் கொண்டிருக்கிறோம்.

இறைவா! நாங்கள் யார் தெரியுமா?

இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்க வேண்டும்; கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக—அமெரிக்காவில் 50 சென்ட், 75 சென்ட் என்று தன் பேச்சுக்குக் கட்டணம் வைத்துப் பிச்சை எடுத்து வந்தாரே! கருணையே வடிவெடுத்த விவேகானந்தர், அவருக்கு நாங்கள் செய்த கொடுமைகளை வேறு யாருக்காவது செய்திருந்தால், எங்கள் தலைகள் உலகத்தில் உள்ள கடல்கள் எல்லாம் மோதினுலும் கூடக் கரைந்து முடியாத சாபங்களை யுகம் யுகங்களாகச் சுமந்து கொண்டிருப்போம்!

நாங்கள் யார் தெரியுமா?

சிலையின் முன்னுல் தியானத்தில் அமர்ந்து கொண்டிருந்த பட்டினத்தாரைக் கழுத்தைப் பிடித்து இழுத்து வரச்செய்து, அரண்மனைக் கருவூலத்தைக் கொள்ளையடித்த திருடன் இவன் தான் என்று ஏசி, அவமானப்படுத்திக் கழுவில் அவரை ஏற்றும்படிச் சொன்னுனே ஒரு மன்னவன், அவனுடைய கால்வழியில் வந்தவர்களே நாங்கள்!

கிண்ணத்தில் இருக்கும் உப்பு பூமியில் சிந்தினுல் பூமிக்குச் சாரம் வரும். ஆனுல் எங்கள் கைகள் அந்த உப்பின் மீது பட்டால், உப்பு கூடச் சாரம் அற்றுப் போய்விடும்.

பனி நிறைந்த அமர நாதத்தில், பனியே கோயிலாக, பனித்துகள்களே மலர்களாக, பனியே பீடமாக, பனியே நீயாக இருக்கும் எங்கள் அமரநாதனே!

தொடுவோரின் பாவங்களை எல்லாம் தோள் மேல் ஏற்றிக்கொண்டு, தொடவும் மனம் இல்லாத மனிதர்கள் உன் கரையில் பிணமாக வேகும்போது, அவர்களின் பாவங்களையும் தீர்த்துக் கொண்டு பாவநீக்கியாய் காசியில் அமர்ந்திருக்கும் விஸ்வேஸ்வரனே!

பாவத்திலே பிறந்து, பாவத்தையே தின்று, பாவிகளாகவே வளர்ந்து நிற்கும் பரிதாபத்திற்குரிய எங்களைப் பார்! இதோ! எங்கள் முன்னுல் நிற்கும் மனிதத் தெய்வங்களை எல்லாம் இனம் கண்டுகொள்ள முடியாதபடி எங்கள் பார்வைகளை மறைத்துக் கொண்டிருக்கும் படலங்களைப் பார்! பார்!!

அறியாமைக் கயிற்றிலும், ஆசைச் சங்கிலிகளிலும் கட்டுப்பட்டு, அந்த மனித தெய்வங்களை வணங்கக்கூட முடியாமல் வளைந்து கிடக்கும் எங்கள் கைகளைப் பார்! பார்!!
என் தேவனே!

உன்னை விட்டால் எங்களுக்குக் கதியில்லை! எங்கள் பார்வையை மறைக்கும் அந்தப் படலத்தை நீக்கு! கட்டப்பட்டிருக்கும் எங்கள் கைகளை அவிழ்த்துவிடு! ஆணவம் நிறைந்த எங்கள் மனங்களின் அழுக்குகளை எல்லாம் துடைத்து விடு!

இந்த மனித தெய்வங்களை மனதார நினைத்து, வாயார வாழ்த்தி, கையாறக் கும்பிட்டு, காலாற அவர்களுக்குச் சேவை செய்யும் வலிமையை எங்களுக்குக் கொடு! தேவனே! அருள் கூர்ந்து எங்களுக்குக் கொடு! ஆணவமே உருவான இராவணனுக்கும் சூரனுக்கும் கூட நீ அருள் புரிந்தவன்! எங்களுக்கும் அருள்புரி!

அறுசுவை உணவில் ''கசப்பு''ச் சுவையின் மகிமை

சி. க. மாணிக்கவாசகம்

உலகில் வாழ்கிற மனிதர்களில் பெரும்பாலோர், முறைப்படி உட்கொள்ள வேண்டிய அறுசுவை உணவில் உட்கொள்ள மறந்து விடுவது 'கசப்பு'ச் சுவைக்குரிய உணவுப் பொருட்களே ஆகும். இதன் காரணமாக மனித உடலில் நோய்கிருமிகள் வாசஞ்செய்ய வழி வகுத்து விடுகிறோம். மேலும், மேற்கண்ட நோய்க்கிருமிகளுக்கு வேண்டிய உணவையும் நம் உணவோடு அதிக அளவு உண்ண வேண்டிய நிலைமைக்கு ஆளாகி விடுகிறோம்.

அதாவது, நமக்கு வேண்டிய உணவைப் போல் இருமடங்கு உண்ண வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 'கசப்பு'ச் சுவை என்பது மருத்துவர் நமக்கு மறைத்துத் தருவதும் நாம் உண்ண மறந்ததுவுமேயாகும்.

'கசப்பு'ச் சுவைக்குரிய காய்கறி கீரை உணவுப் பொருட்களை உண்ணாமல் விட்டுவிடுகின்றபடியால் அடிக்கடி நோய்க்கு இடம் கொடுத்து விடுகிறோம். குறிப்பாக உடலில் தேய்ந்த பாகங்கள் புதுபிக்கப்படும்போது கசப்புக்குரிய கலவையில்லாததால், உறுதியற்ற கலவையால் (மீதமுள்ள ஐந்து சுவைகளாவன காரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு ஆகிய ருசிக் கலவை) நன்றாகப் புதுப்பிக்கப்படாமல் போய் விடுவதால் தொடர்த் தேய்மானத்தால் விரைவில் முதுமையடைய நேரிடுகின்றது என்பதை அனைவரும் உணரலாம்.

சிமிண்ட்டுக்குச் சமமாக 'கசப்பு'ச் சுவையை உதாரணம் கூறலாம். மணல், தண்ணீருடன் தக்க அளவு சிமிண்ட் கலக்கப்படவில்லையானால் கட்டிடம் விரைவில் பழுதடைந்து விடுவதைப் போல, உணவில் 'கசப்பு'ச் சுவைக்குரிய உணவு வகைகள் தக்க அளவு கலக்கப் பெறாமல் விட்டுவிடுகிற காரணத்தால், நெடுங்காலம் இறுதிவரை நோயின்றி வாழக்கூடிய மனித இனம் நூறாண்டுகள் கூட வாழ முடியாத நிலை அல்லவா ஏற்பட்டு விடுகிறது!

'உப்பு' சுவை நீங்க மீதமுள்ள ஐந்து சுவைகளுக்குரியனவைகளையே உட்கொள்ளும் குருவி, காகம், கிளி போன்ற பறவையினங்களும், தன்னிச்சையாகக் காட்டிலே திரியும் விலங்கினங்களும் பல ஆண்டு காலம் பாரினில் நோயின்றி வாழ்கின்றன அன்றோ! அவைகளின் ஆயுளை இதுவரை முழுமையாக அறிந்தோமா! இல்லை! இதன் காரணம், பறவைகள் கசப்புக்குரிய கனி வகைகளைக் காட்டில் தவறாமல் உண்கின்றன. விலங்கினங்கள், கசப்புச் சுவையை உண்ணும் சாகப்பட்சிணிகளைக் கொன்று உண்கின்றன. இதன் காரணமாக அவைகளை எவ்வித நோய்களும் அணுகுவதே இல்லை. அவைகளின் அன்றாடத் தேய்மானங்கள் அனுதினமும் புதுப்பிக்கப்பட்டு விடுகின்றன. இதன் காரணமாக அவைகள் இறுதிவரை பிறர் உதவியின்றி இரை தேடித் தின்று கவலையின்றி வாழ்கின்றன.

ஆகவே 'கசப்பு'ச் சுவைக்குரிய காய்கறி கீரை வகைகளான, பாகற்காய், சுண்டைக்காய், அகத்திக்கீரை போன்றவைகளை உண்பதுடன், வாரம் ஒருமுறை வேப்பிலை வேகடித்த ரசத்தை அரை டம்ளர் (100 மில்லி) நாவினால் ருசித்து அருந்தி வருவதால் இறுதிவரை முழு சக்தியோடு இருப்போம் என்பதை அனுபவத்தில் உணரலாம். அத்துடன் கவலையின்றி பூரண உடல் நலமுடனும் வாழலாம்.

''உண்மையைச் சொன்னால் கசக்கிறதா'' என்பது பழமொழி. இதிலிருந்து கசப்பில்தான் உண்மையான வாழ்வு உள்ளது என்பதை உணர்வோமாக! இனி முழுமையான அறுசுவை உணவால், அடைவோம் அளவற்ற இன்பம்! நோயற்ற வாழ்வால் பெறுவோம் குறைவற்றச் செல்வம்! அறிவோம் கசப்பின் மகிமை!





பகைவனுக்கருள்வாய்

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

அயோத்தி மாநகரில் வைணவத் துறவி ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் சரயு நதியைக் கடந்து வேறு ஓர் இடத்துக்குப் போக வேண்டியிருந்தது. அது மழைக் காலம். வானத்தில் கரிய மேகங்கள் சூழ்ந்து மூட்டம் கண்டிருந்தது. மழை எந்தச் சமயத்திலும் வந்துவிடும் போல இருந்தது.

ஆகவே துறவி வெகு வேகமாக சரயு நதிக்கரையை நோக்கி நடந்தார். நதியில், சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு மிகுதியாக இருந்தது.

துறவி ஆற்றங்கரைக்கு வந்த சமயம், அங்கே ஒரே ஒரு படகு இருந்ததைக் கண்டார். அதுவும் புறப்படும் தறுவாயில் இருந்தது. படகில், பண பலமும் ஆணவமும் நிறைந்த மக்கள் கூட்டமாக உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்கள் துறவியைக் கண்டதும், அவரைத் தங்களுடன் படகில் பிரயாணம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று நினைத்தனர். அதோடு, துறவியைப் பற்றியும் அவரது உடையைப் பற்றியும் கேலியாகப் பேசிச் சிரித்தனர்.

துறவியை நோக்கி படகில் இருந்தவர்கள் அனைவரும், ''இங்கே படகில் இடமே இல்லை. நாங்களே நெருக்கமாகத்தான் உட்கார்ந்திருக்கிறோம். நீ வேண்டுமானால் காத்திருந்து அடுத்த படகில் வா'' என்று ஏகோபித்துக் கூவினர். அவர்களுக்கு, துறவியைத் தங்களுடன் அழைத்துச் செல்லும் விருப்பம் இல்லை. ஆனால், அதைத் துறவியிடம் நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகக் கூறினர்.

அப்போது மாலை சாய்ந்து இருளும் பரவ ஆரம்பித்துவிட்டது. இந்தப் படகைத் தவற விட்டுவிட்டால், அடுத்த படகு கிடைக்குமா என்பதே சந்தேகம். ஏனென்றால், காற்றும் வெள்ளமும் பலமாக இருக்கும் அந்த இரவு வேளையில், படகுக்காரர்கள் யாரும் படகை ஓட்ட முன்வர மாட்டார்கள்.

இரவில் வேறு படகு கிடைப்பதற்கு வழியில்லை என்பதைச் சன்னியாசி உணர்ந்தார். ஆதலால் அவர், அதே படகில் ஏறி ஆற்றைக் கடக்க நினைத்தார்.

அவர் படகுக்காரனிடம், தன்னையும் படகில் ஏற்றிச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். படகுக்காரனுக்கும் நிலைமை புரிந்தது. அவன் சில வினாடிகள் யோசித்துவிட்டு, ''நீங்கள் படகில் ஏறிக்கொள்ளுங்கள்'' என்று சொன்னான். பிறகு அவன், படகின் ஒரு மூலையில் இடத்தை ஒதுக்கித் துறவி உட்கார வழி செய்தான்.

படகில் இருந்தவர்கள், துறவி படகில் ஏறாமல் இருப்பதற்காக ஏதேதோ காரணங்களைச் சொல்லியும் தடுத்தும் பார்த்தனர். ஆனால், தெய்வச் செயலாக

அவர்களுடைய முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. துறவி மக்களுடைய ஆட்சேபணைகளைப் பொருட்படுத்தாதவராகப் படகில் சென்று உட்கார்ந்தார். அவருடைய உதடுகள் பகவானின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தன.

துறவிக்குப் படகிலே இடம் கொடுக்கக்கூடாது என்று நினைத்த மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். அவர் படகில் உட்கார்ந்ததை வெறுக்கும் வகையில் அவர்களுடைய முகங்கள் மிகவும் 'அழகாக' இருந்தன. தாங்கள் இவ்வளவு சொல்லியும் 'இந்த ஆண்டிப் பரதேசி படகில் ஏறிவிட்டானே!' என்று அவர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதோடு, ''சரி, சரி. நாங்கள் இவ்வளவு சொல்லியும் கேட்காமல் நீ படகிலே இடம் பிடித்துக் கொண்டாயா? போகட்டும். உனக்குப் புத்தி வரும் வகையில் சரியான பாடம் கற்பிக்கிறோம்'' என்று மனதிற்குள்ளாகவே கறுவிக் கொண்டார்கள்.

துறவி படகின் ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அப்போதும் அவருக்குத் துன்பம் தரும் வகையில் படகில் இருந்தவர்கள் ஏதேதோ சொல்லவும் செய்யவும் செய்தனர்.

துறவிக்கு அந்த மக்கள் மீது எந்தவித வெறுப்பும் இல்லை. மற்றவர்களைக் கோபிப்பது, வெறுப்பது என்பதெல்லாம் படகில் இருந்த துறவிக்குத் தெரியவே தெரியாத விஷயங்கள். மனத்தால் கூட மற்றவர்களுக்குத் தீமை நினைப்பது என்பது அவருடைய அகராதியிலேயே கிடையாது. அவர், மக்கள் தம்மை வாயில் வந்தபடியெல்லாம் தூற்றியதை உணர்ந்தவராகவே தெரியவில்லை.

படகில் உட்கார்ந்த துறவி, தம் இரத்தத்திலேயே ஊறிய தமது இயல்பின்படி கண்களை மூடி ஆண்டவனின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குள்ளாகவே அவர், புறவுலக நினைவை இழந்து ஆழ்ந்த தியானத்தில் ஆழ்ந்து போனார். ஆகவே, மற்றவர்கள் தன்னைப் பற்றிப் பேசும் கேலிப் பேச்சுகளைக் கவனிக்க இயலாத நிலையில் இருந்தார்.

நடு ஆற்றிலே படகு போய்க்கொண்டிருந்தது. கடுமையாகக் காற்றும் வீசியது. பிரயாணிகள் துறவியைக் கேலிசெய்யும் 'கைங்கர்ய'த்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். வெளியுலக நினைவு இல்லாத துறவியோ அமைதியாக இருந்தார்.

துறவியின் மௌனம் படகில் இருந்தவர்களின் கோபத்தை மேலும் அதிகப்படுத்துவதாக அமைந்தது.

சிலர் ஆற்று நீரைக் கைகளால் வாரி துறவியின் முகத்தில் அடித்தனர். துறவி முழுக்க முழுக்க நனைந்து விட்டார். அப்போதும்கூட, தியானத்தில் இருந்த அவரிடம் எந்தவித மாற்றமும் உண்டாகவில்லை. துறவி கண்களையும் திறவாமலேயே பகவானின் நினைவில் தோய்ந்திருந்தார். இதைக் கண்டதும் மக்களின் கோபம் மேலும் அதிகமாகியது. ஒரு போக்கிரி ஆத்திரத்துடன் துறவியின் கழுத்தில் ஓங்கி அடித்தான். அதைத் தொடர்ந்து பலரும் துறவியை அடிக்கத் தொடங்கினார்கள். ஆனால் உடல் நினைவு அறவே இல்லாததால், துறவி மற்றவர்கள் தன்னைத் துன்புறுத்துவதை உணராமல் இருந்தார்.

''தண்ணீரை மேலே இறைத்தாலும் கண்களைத் திறக்கவில்லை. அடித்தாலும் அசையவில்லை. இனிமேல் இந்தத் துறவியை ஆற்றிலே பிடித்துத் தள்ளி மூழ்கச் செய்ய வேண்டியதுதான்'' என்று படகில் இருந்த மக்கள் முடிவு செய்தார்கள். அந்த முடிவுக்கு வந்த உடன் அனைவருமாகச் சேர்ந்து, துறவியை அசைத்து ஆற்றிலே தள்ள முயன்றனர்.

உண்மையான சாதுக்கள் எப்போதுமே பொறுமையின் கடலாக விளங்குவார்கள். மனித குலத்தின் வரலாறு முழுவதிலும் நாம் இதை பார்க்கிறோம்.

ஆனால், தனது அன்பிற்குரிய பக்தனுக்கு மக்கள் விளைவித்த துன்பங்களை, அதற்கு மேலும் ஆண்டவன் பொறுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. துறவியை மக்கள் ஆற்றிலே தள்ள இருந்த சமயத்தில், வானத்தில் அசரீரியாக ஆண்டவனின் குரல் முழங்கியது. ''ஓ சாதுவே! நீங்கள் ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள். நீங்கள் அனுமதித்தால் இந்தக் கொடியவர்களை இந்த வினாடியே ஆற்றில் மூழ்கிச் சிதறச் செய்கிறேன்.''

படகில் இருந்தவர்கள் அத்தனை பேருமே இடியைப் போல முழங்கிய அசரீரியின் குரலைக் கேட்டு நடுங்க ஆரம்பித்தார்கள். பயத்தால் அவர்களுடைய இரத்தம் உறைந்தது போல ஆகிவிட்டது. முகங்களெல்லாம் சிவந்து விட்டன. துறவியை அதிக அளவில் துன்புறுத்தியவர்கள் பரிதாபமாக விழித்தார்கள். சிலர் பயத்தால் ஆடாமல் அசையாமல் கற்சிலையைப் போலக் கிடந்தார்கள். சிலருக்கு அடி வயிற்றைக் கலக்கியது. சிலரால் பயம் காரணமாகச் சரியாக மூச்சுக் கூட விடமுடியவில்லை.

அசரீரியின் குரலைக் கேட்டதால், அந்த சமயத்தில் துறவிக்குப் புறவுலக நினைவு திரும்பியது. தியானம் கலைந்த துறவிக்குப் படகில் இருந்தவர்களின் நிலைமை புரிந்தது. மறு வினாடியே அவர் ஆண்டவனை நினைத்துக் கைகளைக் கூப்பி வணங்கியபடி, ''எனது அன்புக்குகந்த கருணை தெய்வமே! இந்த மக்களும் உன்னுடைய குழந்தைகளே, அல்லவா? நீங்களே இவர்களை மன்னித்து அருள் புரியவில்லையானால், வேறு யார் அவ்விதம் செய்யப் போகிறார்கள்? அவர்கள், தாங்கள் யார் என்பதையும் இன்னதுதான் செய்கிறோம் என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள். என் தெய்வமே! தங்களுக்கு என்மீதுள்ள அன்பின் பெயரால், எனது பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து உங்களுடைய இந்தக் குழந்தைகளை மன்னித்து திருவருள் புரிய வேண்டுகிறேன். அவர்களுடைய பயத்தைப் போக்கி அருள்வீராக! அவர்களுக்கு அமைதி தருவீராக! தங்களின் அன்புச் செல்வங்களாக இவர்கள் அனைவரையும் கருணைகூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களுக்குத் தங்களின் தாமரைத் திருவடிகளில் மனப்பூர்வமாக பக்தி உண்டாகச் செய்யுங்கள்'' என்று உள்ளம் நெகிழப் பிரார்த்தித்தார்.

ஆண்டவன் துறவியின் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தார். துன்பம் விளைவித்தவர்கள் சான்றோர்களாகத் திருந்தப்பெற்று தலைசிறந்த பக்தர்களானார்கள்.

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

தமிழாக்கம்: 'அண்ணு' சுப்ரமண்யம்

சுவாமி பிரேமானந்தர் எழுதிய கடிதங்கள், வாழும் வகையைக் காட்டுவதாகவும் ஆறுதல் தருவதாகவும் அமைந்திருக்கின்றன. அரிய கருத்துகளைக் கொண்ட அவருடைய கடிதங்களில் இருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கு இடம் பெறுகிறது.

உன்னுடைய சகோதரன் இறந்த செய்தி கேட்டு நான் வருந்துகிறேன். இந்த உலகில் சாவைவிட நிச்சயமானது வேறெதுவுமில்லை. சாவைக் கடந்து செல்வதற்கு ஞானிகளின் தொடர்பை நாடவேண்டும் என்று சாஸ்திரங்கள் நமக்குக் கூறுகின்றன. அதை நாம் கைக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருநாமத்தை வாழ்க்கையில் ஒரே ஒருதரம் உச்சரித்தவர்களாயிருந்தாலும், அவர்கள் அவரை அடைவார்கள் என்பதைப் பற்றி ஒருபோதும் ஐயப்படாதே.



சுவாமி பிரேமானந்தர்

நீ பகவானுடைய சேவையில் ஈடுபட்டிருக்கிறாய்; நீ அஞ்ச வேண்டியதில்லை. நீ பகவானை சேர்ந்தவன் என்றும், பகவான் உன்னுடைய அழியாத செல்வம் என்றும் தெரிந்து கொள். உன் தாயார், தனது மகன் இறந்து விட்டதைக் குறித்து வருந்துவது இயற்கை. ஆனுல் கருணைக் கடலான பகவானுடைய அருளால் அவள் ஆறுதல் அடைவாள். அவர் தூண் போன்றவர். அவரை விடாமல் பிடித்திருப்பவன் மரணத்தைத் தாண்டுவான்.

தூய அன்னையார் இப்போது கல்கத்தாவில் இருக்கிறுர். தம்முடைய அருளை அவர் ஏற்றத் தாழ்வு இல்லாமல் அனைவருக்கும் வழங்கி வருகிறுர்.

ஜபமாலை வைத்துக்கொண்டு ஜபம் செய்வது மிகவும் நல்லது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருநாமத்தை ஜபம் செய். மதக்கோட்பாடுகளை நாம் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. அவைகளை மதிப்பவர்கள் பின்பற்றட்டும். நமக்கு வேண்டியது பொங்கியெழும் பக்தி—பிருந்தாவனத்தில் கோபியர்களுக்குக் கிருஷ்ணனிடம் இருந்தது போன்ற அன்பு.

'தோழி! என் அன்பு, வாய்ப் பேச்சன்று. என்னுடையது பிரிவாற்றுமையால் துன்பப்படும் உள்ளம். காதலனை நான் அடைய வேண்டும்.' கோபிகளைப் போல அவ்விதம் ஆர்வம் கொள். அந்தப் பிரேமையைப் பருகு. அவனுக்கே பித்தனுகிவிடு. இதுதான் பக்தி மார்க்கம். ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்த பிறகு, இந்த உலகில் பக்திவெள்ளம் பெருகி ஓடுகிறது. அதில் குதித்து நீராடு; அச்சம் வேண்டாம். நீ சாவில்லாத புதியதொரு பிறவியை எய்துவாய். மேல் நோக்கிச் சென்று கொண்டிரு.

தியானம் செய்வது எளிதன்று. சிலரால் தியானமே செய்ய முடியாது. எல்லோருக்குமே அதில் கஷ்டம் உண்டு. சிலர்தான் அதை ஒப்புக்கொள்வார்கள். பிறர் மௌனம் சாதிப்பார்கள். மனதார ஸ்ரீராமகிருஷ்ணரைக் கூவியழைத்து அவரிடம் பிரார்த்தனை செய். அவரை உனக்குச் சொந்தமாகக் கருதி உனக்கு வேண்டியதைச் சலுகையுடன் கேள். நாளடைவில் உனக்கு வேண்டியதையெல்லாம் அவர் செய்வார். வருந்தாதே. அவர் அளவு கடந்த கருணை உடையவர். பகவானுக்கு உன் மனதை அளித்துவிடு. நீ அவரை அடைந்து விடுவாய்.

உபதேசம் பெறுவது அவசியம். நீ ஒரு வழியைப் பின்பற்ற வேண்டும். உபதேசத்தால்

குரு உனக்கு அந்த வழியைக் காட்டுவார். குருவின் அவசியத்தைப் பற்றிச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாதகன் சாஸ்திரத்தைப் பின் பற்ற வேண்டும். குரு இல்லாமலேயே அனை வரும் கடவுளை அடைந்துவிட முடியாது. முக் கியமான இரகசியம் பகவத் பிரேமை. இந்தப் பிரேமையின் எழுச்சி ஒரு பெரிய பாக்கிய மாகும்.

[ஒரு இளம் பக்தருக்கு] உன்னுடைய தாயா ருக்குத் தனி வருமானம் இருந்து, உனக்கும் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லா விட்டால், எவ்வளவு காலம் முடியுமோ அவ் வளவு காலம் உலகத்தளைகளில் இருந்து நீ சுதந்திரமாக வாழ்வது நல்லதாகும். நீ உலகப் பாசமாகிய கடலில் மூழ்கித் தவிக்க ஒருவேளை நேரிட்டால், உன்னுடைய உறவினர்களும் நண்பர்களும் உன்னை எள்ளி நகையாடுவதைத் தவிர உதவி செய்ய மாட்டார்கள். உதவி செய்ய அவர்களுக்குச் சக்திதான் ஏது? அஞ் ஞானத்தில் கட்டுண்ட அவர்கள், மற்றவர்களை யும் அதே நிலையில் பார்க்கத்தான் விரும்புவார் கள்.

குழந்தாய்! கவனி. நாங்கள் உன்னைத் திரு மணம் செய்துகொள்ள வேண்டாமென்றால் நீ கேட்க மாட்டாய். உன்னைச் சுற்றிநோக்கி, உன்னுடைய நண்பர்களும் உறவினர்களும் கல்யாணக் கட்டுகளால் துன்பப்படுவதைக் கண்ட பின்பும் அந்த வலையில் விழ நீ விரும்பி னால், எங்கள் புத்திமதியால் என்ன பயன் ஏற் படப் போகிறது? தனக்கு வியாதி இருக்கிறது என்று அறியாதவன் அதிலிருந்து விடுதலைக்கு வழி தேடமாட்டான்.

தான் நோய்வாய்ப்பட்டவன் என்று உணர்ந்த பிறகுதான் ஒருவன் மருத்துவரை நாடி அவர் கூறும் சிகிட்சையை ஏற்பான். உனக்கு இவ்வுலக வாழ்க்கை ஒருநோய் என்றும், உலகமே துன்ப மயம் என்றும் உணர்வு ஏற்பட் டால், உலக போகங்களில் வெறுப்புத் தோன்றி இறைவனிடம் அன்பு வளரும். அப்போது பிறவி நோய்க்கு நீ மருந்துதேடுவாய். இஷ்டதெய்வத் தின் திருநாமத்தை ஓதுவதுதான் அந்த மருந்து.

ஆரம்பத்தில் நாமஜபம் செய்யும் பழக்கம் கடினமாக இருக்கலாம். ஆனால் நாளடைவில் அதில் மகிழ்ச்சி அடைவாய். பிறகு நாமஜபம் இல்லாமல் உன்னால் வாழ முடியாது. நம்பிக்கை யையும் தைரியத்தையும் கைக்கொள். ''நாங் கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்கள். நாங்கள் பற்றற்ற ஆன்மாக்கள். நாங்கள் பகவானை அடைவோம் என்பது நிச்சயம்'' என்று மன தைத் திடமாக்கிக் கொள்ளுங்கள். இந்த நிச் சய புத்தியை அடைந்த பிறகுதான் காமம், கோபம், பேராசை முதலிய கொடிய பகைவர் களை நீங்கள் வெல்ல முடியும். ஸ்ரீராமகிருஷ் ணரின் திருவருள் நிச்சயமாக உன்னிடம் இருக் கிறது. அவரை அடைய வேண்டும் என்று தீவிரமாக விரும்பு; அவரை அடைவாய்.

[தூய அன்னையாரின் சீடர் ஒருவருக்கு] உன் மனதில் தூய அன்னையின் தெய்வீகத் திருவடி களை இறுகப் பற்றிக் கொண்டால் நீ யமலோ கம் சென்றாலும், ஏழை யமன் உன்னைக் கண்டு பயந்து ஓடி விடுவான்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் குழந்தைகள் இந்த உல கில் எல்லா இடங்களிலும் தங்களுக்கென்று இடம் உடையவர்கள். நம்முடைய ஆண்டவன் ஒரு அளவுக்குட்பட்ட தேசத்தில் மட்டும் ஒடுங் கியவர் அல்ல. அவர், தமது பக்தர்களை எங் கெங்கே வைக்கிறாரோ அதுவெல்லாம் அவரு டைய தேசமே ஆகிறது.

[ஒரு பக்தருக்கு] உன்னுடைய குற்றங்குறை களைப் பார்ப்பதற்கு கற்றுக் கொள். உதடும் உள்ளமும் ஒருமித்திருப்பது லட்சியம் என் பதை நீ உணர்ந்திருந்தால், அதை அடைய நீ என்ன முயற்சி செய்கிறாய்? உனக்கு நோயென் றால் அதற்கு நான் மருந்து சாப்பிட்டால் அது போய் விடுமா? காமத்தில் உழல்வது நாசத் திற்கு வழி என்பதை நீ உணர்ந்தால், அதி லிருந்து விடுபட நீ வழியைத் தேடுகிறாயா? உன்னுடைய குறைகளை கவனி. அதற்காக வருந்து; தவறுகளை மீண்டும் செய்வதில்லை என்று தீர்மானம் செய்து கொள். உள்ளம் தூய்மை அடைய, தொடர்ந்து விடாமல் முயற்சி செய். பகவானுடைய கிருபை வானிலிருந்து மழையாகப் பொழிவதில்லை. உன்னை உயர்த்திக் கொள்ள நீ செய்யும் முயற்சிதான் அந்த கிருபையாகும்.

அருள்நெறிக் கதை:

பௌத்தத் துறவியும் வாசவதத்தையும்

சரஸ்வதி

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு உயர்நிலைப்பள்ளி, சென்னை-1

ஊருக்கே பெரிய மாளிகை. அதில் எழிலோவியம் வாசவதத்தை வாழ்ந்து வந்தாள். அவளுடைய அழகுக்கு வசப்பட்ட உள்ளங்கள் ஏராளம்!

இளவேனிற் காலத்தின் காலை நேரம். ஒரு பௌத்தத் துறவி, வாசவதத்தையின் மாளிகையின் வாயிலில் பிக்ஷையின் பொருட்டு வந்து நின்றார். திடீரென்று துறவியின் மீது வாசவதத்தையின் பார்வை சென்றது. ஒருமுறை பார்த்தாள். மறுமுறை பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள்.

வந்த துறவி உபகுப்தர் ஓர் ஆண்டிதான். ஆனால், மறுவுலக வாழ்க்கைக்குத் தேவையான அருள் விஷயத்தில் நிகரற்றவர். அவருக்கு என்று சொந்த ஊர், வீடு, வாசல் எதுவுமே கிடையாதுதான். உலகிலேயே பெரிய பெரிய ராஜ்யங்களைவிடவும், பெரியதாகவும் அளவிட இயலாததாகவும் இருப்பது மனம்தான். அப்படிப்பட்ட மனதின் மீதே முழு அளவில் வெற்றி கண்டவர் உபகுப்தர். புலன்கள் அனைத்துமே அவருக்கு அடிமை.

அத்தகைய துவராடை அணிந்த துறவியின் முன், பலரைத் தோற்கடித்த பேரழகி வாசவதத்தை தோற்றுப்போனாள். உபகுப்தர் நீட்டிய பிக்ஷைப் பாத்திரத்தில் தன் இதயத்தையே அர்ப்பணிக்க முன்வந்தாள்; கெஞ்சினாள்; பிரார்த்தித்தாள்.

சாந்தமூர்த்தியாகிய பிக்ஷு, ''எனக்கு இப்போது நேரமில்லை'' என்றார்.

''பின் எப்போது வருவீர்கள்?'' என்று ஆவல் ததும்பக் கேட்டாள் வாசவதத்தை.

பிக்ஷுவோ சிறிதும் கவலையின்றி இயல்பான குரலில், ''சில நாட்கள் செல்லட்டும். பிறகு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, ஒரு வினாடியும் தாமதிக்காமல் பௌத்த விஹாரத்தை நோக்கி விரைந்தார்.

துறவியின் பதிலையும் செயலையும் வாசவதத்தை எதிர்பார்க்கவில்லை. அவள் அடிபட்ட

> **இன்பத்தில் திளைக்கும்போது பெரிய உண்மைகள் புரிவதில்லை. திக்கற்ற நிலையிலே உண்மை உள்ளபடியே விளங்குகிறது.**

பெண்புலியாகச் சீறினாள்: ''கேவலம் ஒரு பிக்ஷு என் எழிலை அலட்சியப்படுத்துவதா! பார்த்துவிடுகிறேன்!''

உபகுப்தர் சொன்ன அந்த நாள் எப்போது வரும் என்று காத்திருந்தாள்.

அற்ப ஆயுளை உடைய சந்தியா காலம் விரைந்தது. சரத்காலச் சந்திரன் மிகுந்த சோபையுடன் விண்ணில் தோன்றி நிலவைப் பொழியத் தொடங்கினான். அடர்ந்த காட்டிலுள்ள மரங்களின் கால்களைக் கழுவியவண்ணம் கங்கை ஓடிக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்டின் வழியாக உபகுப்தர், தமது அன்றாடக் கடமைகளை முடித்துவிட்டு மடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் ஒரு சிங்கம் அவர் மீது பாயத் தயாராயிற்று. அதற்குத் தெரியுமா புத்தரின் கொள்கைகளும் உபதேசங்களும்? எனவே அது உபகுப்தரை நோக்கிப் பாய்ந்தது. உபகுப்தர் தம் தலையைத் தாழ்த்திக்கொண்டு தயாராக இருந்தார்.


அருகில் ஒரு சிறிதும் ஒளி புகமுடியாத அடர்ந்த புதரிலே வேடன் ஒருவன் ஒளிந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். சிங்கம் பாயத் துவங்கியவுடன், எங்கிருந்தோ வந்த அம்பு சிங்கத்தின் மீது பாய்ந்து அதைக் கீழே வீழ்த்தியது! மிகவும் பெருமையுடன் வேடன் வெளியே வந்தான்.

உபகுப்தர் வேடனை நோக்கி, ''அப்பா! நிரபராதியான சிங்கம் உனக்கு என்ன தீங்கு செய்தது? அது என்னைத்தானே கொல்ல வந்தது?'' என்று அமைதியாகக் கேட்டார். வேடன் துணுக்குற்றான். உபகுப்தரின் கருணை விழிகள் அவனுக்கு எத்தனை எத்தனையோ விஷ

யங்களை எடுத்துக் கூறின. வேடன், தன்னுடைய வில்லையும் அம்பறுத்துணியையும் அம்புகளையும் கங்கையிலே வீசிவிட்டு, 'இதுவே என்னுல் செய்யப்பட்ட கடைசிக் கொலை' என்று சொல்லி அன்பின் வழிநாடிப் புறப்பட்டான்.

உபகுப்தர் மிகவும் சிரமத்துடன் சிங்கத்தைக் கங்கைக்கு அருகில் இழுத்து வந்தார். அம்பைப் பிடுங்கிக் காயங்களைக் கழுவினுர். சிங்கம் பிழைக்குமா என்பது சந்தேகம்தான். ஆனுல், உபகுப்தர் சிங்கத்தைக் காப்பாற்றும் முயற்சியில் மனம் தோய்ந்து ஈடுபட்டிருந்தார்.

அதேசமயம் நிலவின் ஒளியிலே கங்கையில் ஒரு படகு மிதந்து வந்தது. அதிலிருந்து வந்த இனிய கீதம் மிகவும் ரம்மியமாக இருந்தது. திடீரென்று பாட்டு நின்றது. காரணம், படகில்



வீற்றிருந்த வாசவதத்தை உப்குப்தரின் செய்கையைக் கண்டதுதான். உடனே, ''ஏ பிக்ஷுவே! என்ன காரியம் செய்கிருய்? அந்தச் சிங்கம் உன்னையே கொன்றுவிடுமே!'' என்று சொல்லி அவள் கூச்சலிட்டாள்.

உடனே உபகுப்தர் அவளை நோக்கி, ''பெண்ணே, நீ தவருகச் சொல்கிருய். வெளியே அழகிய உடல்கொண்டு பிறரைக் கெடுக்கும் உள்ளங்கொண்ட நயவஞ்சகர்களை விட இது கொடியது அல்லவே!'' என்ருர்.

வாசவதத்தைக்கு எதுவுமே விளங்கவில்லை. அவரைக் கண்டதும் ஆசைதான் அதிகமாகியது. ''பிக்ஷு, உம்மையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனே! என்னை மறந்து விட்டீரா!'' என்று மயக்கத்துடன் கேட்டாள். உபகுப்தர், ''மறக்கவில்லை. அவசியம் சில நாட்கள் சென்ற பிறகு வருகிறேன்'' என்ருர். அவளோ அன்றே, அந்த விஞடியே வர வேண்டும் என்று அடம்பிடிக்கத் தொடங்கினுள்.

உபகுப்தர் அவளைத் தேற்றும் வகையில், ''இந்தப் பிறவியிலேயே வருகிறேன்'' என்று சொன்னுர். கடைசியில், ''இந்த வருடம் முடிவதற்குள்ளாகவே வந்துவிட வேண்டும்''என்று வேண்டிக்கொண்டு வாசவதத்தை தன் வழியே சென்ருள்.

உபகுப்தர் மீண்டும் சிங்கத்திற்கு மருத்துவம் செய்வதில் முனைந்தார்.

வாசவதத்தை நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். நாட்கள் நகர்ந்தன. பருவங்கள் மாறின. ஆனுல் உபகுப்தர் மட்டும் வரவேயில்லை. வருடம் முடிவதற்கு இன்னும் பதினைந்து நாட்களே மீதமிருந்தன.

அன்றைய தினம் வாசவதத்தையின் வீடு மிகவும் களை கட்டியிருந்தது. அன்று அவளுடைய வீட்டிலே ஒரு லட்சாதிபதிக்குத் தனி விருந்து. நடு இரவு நேரம். வாசவதத்தை, வேலைக்காரர்கள் அனைவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டாள். கட்டிலில் மது மயக்கத்தில் மயங்கி அசைவற்றுக் கிடந்தான் லட்சாதிபதி. சற்றும் தயங்காமல் வாசவதத்தை தன்னுடைய கூரிய கத்தியால் இலகுவாக அவனை ஒரே குத்தில் கொன்று விட்டாள்! ஆம் கொலைதான். அவள் ஒரு சௌந்தரிய கொலைக்காரி! அந்த லட்சாதிபதியோ, ''அடி, மாயப் பிசாசே!'' என்று அலறியபடி தன் உலக வாழ்க்கையை அந்த விஞடியே முடித்துக் கொண்டான்.

அதேசமயம் வாயிலில் **'வாசவதத்தா!'** என்றழைக்கும் குரல் கேட்டது. அவள் ஜன்னல் கதவைத் திறந்து பார்த்தாள். அங்கே உபகுப்தர் நிற்பதைக் கண்டு துணுக்குற்ருள். ''சுவாமி! வந்துவிட்டீர்களா!'' என்ருள். ''இல்லை, விரைவில் வருவேன்'' என்ருர் உபகுப்தர். ''பிறகு ஏன் இந்த அகால வேளையில் வந்தீர்கள்'' என்ருள் வாசவதத்தை. ''ஒன்றுமில்லை பெண்ணே! நான் புத்த விஹாரத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். உன் வீட்டைப் பார்த்ததும் நீ விழித்துக் கொண்டிருக்கிருயா? அல்லது தூங்கிக் கொண்டிருக்கிருயா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அழைத்தேன்'' என்ருர்.

உடனே வாசவதத்தை, தனக்கு அளிக்கப் பட்ட வாக்குறுதி நினைவிருக்கிறதா என்று ஆவலோடு கேட்டாள். உபகுப்தர், ''புத்தரின் சீடர்கள் பொய் சொல்வதில்லை. இன்னும் பதினைந்து நாட்கள் மீதியிருக்கின்றனவே, வந்து விடுவேன்'' என்று சொல்லிவிட்டு, உடனே அங்கிருந்து சென்று விட்டார்.

வாசவதத்தை ஒளிந்து கொண்டாள்.

அவள் பணத்திற்காக லட்சாதிபதியைக் கொலை செய்தாள். குட்டு வெளிப்பட்டது. வாசவதத்தை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டாள். அவளுக்கு உதவியாக அவளது செல்வமோ, அழகோ, வழக்கமாக வரும் காதலர்களோ வரவில்லை.

''அவளுக்குத் தூக்குத் தண்டனையே தரப் பட வேண்டும். ஆனால், அதுவே அவளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகிவிடுமே! ஆகவே, அந்த வாய்ப்பைத் தந்து அவளைத் தப்பவிட்டுவிடக் கூடாது. அவளுடைய அழகு அழிக்கப்பட வேண்டும்'' என்று விசாரணையின்போது தீர்ப்பு வழங்கப்பட்டது.

வாசவதத்தை, ''ஒரே ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்'' என்று தன்னால் இயன்ற மட்டும் மன்றாடி வேண்டினாள். தன் ஆருயிர் உபகுப்தரைப் பார்த்த பிறகு, எத்தகைய தண்டனையை வேண்டுமானாலும் அவள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தாள். ஆனால், அவளுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க ஒரே ஒருவர் கூட முன்வரவில்லை.

பிறரை வசீகரித்த வாசவதத்தையின் விழிகள் பிடுங்கப்பட்டன. காதுகளையும் மூக்கையும் அறுத்தெறிந்தார்கள். அவளுடைய இரண்டு கைகளும் கூட வெட்டப்பட்டு விட்டன. அவளுடைய செல்வம் முழுவதும் அபகரிக்கப்பட்டது. அந்த அவல நிலையில் வாசவதத்தை ஓர் அனாதையாக நடுத்தெருவிலே வீசப்பட்டாள். அதோடு மட்டும் இல்லாமல், வருவோர் போவோரிடமும் அவளுடைய பயங்கரக் கதையை வேறு விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வளவு காலமும், அவளையும் அவளது செல்வத்தையும் சுற்றிச் சுற்றி வந்தவர்கள் அத்தனை பேருமே, தங்களை 'யோக்கியர்களாக' பாவித்துக்கொண்டு, இப்போது வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு அவள் இருக்கும் இடத்தைவிட்டே விலகிச் சென்றார்கள்.

இத்தகைய அவல வேளையில் உபகுப்தர் அவளருகே வந்தார். அவளுடைய தலையில் தன் கையை வைத்தார்.

''யார்?''

''நான்தான் உபகுப்தன்.''

வெகுண்டாள் வாசவதத்தை. ''ஏன் வந்தீர்? நீங்கள் ஒருவர் மட்டும்தான் என்னைப் பரிகசிக்காத ஒரே ஆள் என்று நினைத்தேன், நீங்களும் இப்போது வந்து விட்டீரா?'' என்று எரிந்து விழுந்தாள். ''போ! திரும்பிப் போ! உன்னை யார் இங்கே அழைத்தது!'' என்று பொரிந்து கொட்டிக் கூச்சலிட்டாள்.



உபகுப்தர் தமக்கே உரிய இயல்பான குரலில் அமைதியாகப் பேசினார். ''பெண்ணே! என்னை ஏன் விரட்டுகிறாய்? நீ அழைத்தபடியே வந்திருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் மீதம் இருக்கின்றன. இதுதான் சரியான சமயம்.''

வாசவதத்தை, ''பிக்ஷுவே! நான் எல்லா நலன்களும் பெற்று எழிலரசியாய் விளங்கும் போது உம்மை அழைத்தேனே தவிர, இப்போது அழைக்கவில்லையே!'' என்றாள்.

ஆனால் தயாளமூர்த்தி உபகுப்தர், கருணை ததும்ப,இந்த உலக வாழ்க்கையின் சாரமற்றத்

தன்மையை விளக்கிப் **பரம்பொருளின் மீது மனதைச் செலுத்துவது ஒன்றே ஒன்று மட்டும் தான் மனித வாழ்க்கையின் குறிக்கோள்** என்பதை விளக்கினுர்

வாசவதத்தையோ, ''இந்த அந்திம காலத்தில், என்னுல் எதுவுமே செய்ய இயலாத சமயத்தில் வந்து அறிவுரை தருகிறீர்களே! அப்போதே வந்திருந்தால் நான் திருந்தி இருப்பேன் அல்லவா?'' என்று நெஞ்சு வெடிக்கக் கூறினுள்.

உபகுப்தர், ''அம்மா! வாழ்க்கையைப் பற்றிய அப்படிப்பட்ட பெரிய உண்மைகளைப் புரிந்து கொள்ளும் நேரம் இப்போதுதான் உனக்கு வந்திருக்கிறது. உன்னை போதிசத்துவரிடம் அழைத்துப் போகிறேன்'' என்று கனிவுடன் சொன்னுர். அவளை போதிசத்துவரிடம் அழைத்தும் சென்ருர்.

புத்தபிரானின் கருணையால், வாசவதத்தை பாவ புண்ணியங்களில் இருந்தும் விடுபடும் பிராயச்சித்தம் என்னும் புனித ஆற்றில் மூழ்கி எழுந்தாள். துறவறம் மேற்கொண்டாள். எஞ்சிய வாழ்க்கை முழுவதையும் பரம்பொருளின் திருவடியைத் தொழுதபடியே மெய்யன்பைப் பெற்ருள்.



மகாகணபதி ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

[ஆசிரியர்: வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள். வெளியிட்டோர்: ஸ்ரீ அழகிய கன்னி விஞயகர் கோவில் டிரஸ்ட், 35/867 சபாபதி கோவில் தெரு, தோவாளை P.O. திருவனந்தபுரம்-695023. விலை: ரூ. 5]

பரமசிவன் திரிபுர ஸம்ஹாரத்திற்குப் புறப்படும்போது மகாகணபதியை முறைப்படி வழிபடாததால் முதலில் தோல்வி அடைந்தார் என்றும், பிறகு தவம் செய்தபோது மகாகணபதி அவருடைய முகத்திலிருந்தே வெளியே தோன்றி எல்லா இன்னல்களையும் போக்கி வெற்றி தரக்கூடிய தன்னுடைய ஆயிரம் நாமங்களையும் அவரே சிவபெருமானுக்கு உபதேசித்தார் என்பதும் புராண வரலாறு.

மகாகணபதி ஸஹஸ்ரநாமத்துக்கு எழுதப்பட்ட உரைக்குள் ஸ்ரீவித்யோபாசகர் பாஸ்கரராயர் இயற்றிய 'கத்போதம்' என்னும் உரைதான் தலைசிறந்தது.

அந்த உரையின் தொடக்கத்தில். அவர், ''அநேகம் கணேச ஸஹஸ்ரநாமங்களுள் கணேச புராணத்திலுள்ள ஸஹஸ்ரநாமமே சம்பிரதாயம் அறிந்த கணேச உபாசகர்களால் ஆதரிக்கப்படுவதாகும். மந்திரங்கள், தந்திரங்கள், புராணங்கள் ஆகியவைகளை நன்கு உணராமல் தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி பொருத்தமில்லாத பொருள்களைக் கூறும் இயல்புடையவர்களின் முந்தைய உரைகளைத் தவிர்த்து, பிரமாணங்களின் வாயிலாகச் சரியான பொருளை உணர்ந்து இதை எழுத முற்படுகிறேன்'' என்று கூறியுள்ளார்.

பாஸ்கரராயருடைய அந்த உரையைப் பின்பற்றி ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள் இந்நூலைத் தமிழில் 'கணேசப்ரியை' என்னும் உரையுடன் எழுதியுள்ளார். ஒரு நாமம் இரண்டாகவும், இரண்டு நாமம் ஒன்ருகவும் படிக்கப்படுதல், ஆயிரத்தை 1008 ஆகவும் இன்னும் அதிகமாகவும் கணக்கிடுதல், பொருத்தமில்லாத பொருள் கூறுதல் முதலிய குற்றங்கள் இந்நூலில் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸஹஸ்ரநாம மூலமும் நாமாவளியும், சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. கணபதி உபாசகர்களுக்கு இந்த நூல் உண்மையிலேயே ஒரு அரிய பொக்கிஷம் ஆகும்

—''அண்ணு''

மதியில்லா அரவு

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

காரைக்காலம்மையார் இறைவனிடம் மிகவும் உரிமையோடு பேசுபவர். தம்முடைய குழந்தையுடன் பேசுவது போல ஒரு சமயம் பேசுவார். தம்முடைய தந்தையுடன் பேசுவது போலப் பேசுவார். இறைவனுக்கு அறிவுரை சொல்வது போலச் சில சமயங்களில் பேசுவார். அவனுடைய நிலைக்கு இரங்குவது போலச் சில சமயம் பேசுவார். நகைச்சுவையோடு பேசுவதும் உண்டு. புதிய புதிய கற்பனைகளைச் செய்துகொண்டு பாடுவதையும் அவரிடம் காணலாம்.

இப்போது அவர் தமக்குள்ளே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்கிறார்.

இறைவன் திருமுடியின் மேலுள்ள பிறையைப் பார்க்கிறார். அவன் மார்பிலுள்ள பன்றிக் கொம்பைப் பார்க்கிறார். அவன் அணி



கலனாக அணிந்த பாம்பைப் பார்க்கிறார். பிறையும் பன்றிக் கொம்பும் இருந்த இடத்திலே இருக்கின்றன. பாம்போ படமெடுக்கிறது; ஆடுகிறது. தலையை மேலும் கீழும் தூக்கித் தாழ்த்திப் பார்க்கிறது. சிறிது நேரம் அது சும்மா இருக்கிறதில்லை. தன் விருப்பம் போல அது அசைந்தும் ஆடியும் நிமிர்ந்தும் தாழ்ந்தும் இயங்கியபடியே இருக்கிறது.

'இந்தப் பாம்பு எதற்காக இப்படிக் கீழும் மேலும் அசைந்து ஆடிப் பார்க்கிறது? இறைவனிடம் வந்த பிறகும் இந்த ஆட்டம் எதற்கு? சும்மா இருந்த இடத்திலே ஆடாமல் அசையாமல் சுகமாக இருக்கலாமே!' என்ற எண்ணம் அம்மையாருக்குத் தோன்றுகிறது. அந்தப் பாம்பு மேலும் கீழும் அசைந்து மாறி மாறிப் பார்க்கிறதை அவர் நன்றாகப் பார்க்கிறார்.

சந்திரனைப் பாம்பு கவ்வும், விழுங்கும் என்று சொல்வது ஒரு மரபு. சந்திர கிரகணத்துக்கு விஞ்ஞானம் ஒரு காரணம் சொல்லும். அதை யார் கவனிக்கிறார்கள்? சந்திரனை இராகு என்ற பாம்பு விழுங்குகிறது என்றுதான் பலகாலமாக ஒரு கற்பனையை வளர்த்து அனுபவித்து வருகிறோம். அது மட்டுமல்ல. சந்திரனுக்கும் பாம்புக்கும் விரோதம் என்று மேலும் அந்தக் கற்பனையைப் படரவிட்டுப் புலவர்கள் பலபல வருணனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். காரைக்காலம்மையாரும் கவிபாடும் புலமையை உடையவரே அல்லவா? அதனால்தான் அவருக்குப் பலபல கற்பனைகள் எழுகின்றன.

'பாம்புக்கு மதி பகை ஆயிற்றே; பாம்பு சந்திரனை விழுங்கி விடுமே! இறைவன் கழுத்தில் உள்ள இந்தப் பாம்பு நினைத்தால் ஒரு தாவு தாவி முடிமேல் உள்ள சந்திரனை லபக்கென்று விழுங்கிவிடலாமே! ஏன் விழுங்கவில்லை?'

ஒரு காரணம் தோன்றுகிறது. இறைவனிடம் அடைக்கலம் புகுந்தவன் சந்திரன். அவனைப் பாதுகாப்பதாக இறைவன் உறுதிமொழி அளித்திருக்கிறான். தக்கனுக்குப் பயந்து இறைவனைச் சரணடைந்தான் சந்திரன். அதனால் இறைவன் அவனைத் தலையின் மேல் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே சந்திரன் இப்போது இறைவனுக்குப் பிரியமானவன். அவனுக்கு வரும் ஆபத்தினின்றும் அவனைக் காத்தவன், இப்போது அவனை இந்தப் பாம்பு விழுங்க முற்பட்டால் அதைப் பார்த்துக் கொண்டிருப்பானா? தக்கனுடைய தண்டனைக்கு அஞ்சி வந்த சந்திரனைக் காப்பாற்றின இறைவன், அவனைப் பாம்புக்கு இரையாகும்படி விட்டு விடுவானா? கிளியை வளர்த்துப் பூனைக்கா இரையாக்குவது? இதை அறிந்து அஞ்சியோ அந்தப் பாம்பு சந்திரனை விழுங்கவில்லையோ?

அப்படியானால் அது இருந்த இடத்திலே சும்மா இருக்கலாமே! அது எதற்காகச் சந்திரன் உள்ள முடியை ஏற இறங்கப் பார்க்கிறது? முடியை அடிக்கடி பார்க்கிறதே! எப்போது இறைவன் கவனிக்காமல் இருப்பானோ, அப்போது பார்த்து விழுங்கலாம் என்று காத்திருக்கிறதோ?

அப்படி இராது. இறைவனைச் சார்ந்த பிறகு எவ்வளவு பொல்லாதவர்களானாலும் நல்லவர்களாகி விடுவார்கள். அறத்தின் வழி ஆட்சி நடத்தும் அரசர்களுடைய நாட்டில், ஒரு துறையில் மானும் புலியும் பகை உணர்ச்சியை மறந்து தண்ணீர் குடிக்கும் என்று சொல்வார்கள். அறமே வடிவமாக இருக்கும் ஆண்டவனிடம் உள்ளவற்றிற்குப் பகை உணர்ச்சி இருக்குமா?

ஆகவே, ஆண்டவனுடைய ஆபரணமாக விளங்கும் பாம்பு இயல்பான பகை உணர்ச்சியை மறந்து, சந்திரன் தனக்கு உணவாவது என்பதையும் மறந்து சும்மா அசைந்தாடுகிறது.

இப்படிச் சொல்லலாம் போலத் தோன்றுகிறது. ஆனால் அந்தப் பாம்பு இறைவனுடைய மார்பையும் பார்க்கிறது; தலையையும் பார்க்கிறது. இறைவனை அடைந்த உயிர்கள் அமைதியான நிலையைப் பெறுவார்கள் என்று சாத்திரம் சொல்கிறது.

சிவபெருமான் சாந்தமே வடிவானவன். 'சாந்தம் சிவம் சுந்தரம்' என்று சுருதி பேசுகிறது. அவனைச் சார்ந்தவர்கள் யாவரும் கவலையற்றுச் சாந்தியான நிலையில் இருப்பார்கள். அப்படியிருக்க, இந்தப் பாம்பு மேலும் கீழும் தலையை எடுத்துப் பார்த்து ஆடுகிறதே! ஏன்?

இறைவன் திருமார்பை அம்மையார் கவனிக்கிறார். அங்கே வளைவாக வெள்ளை வெளே' ரென்று பன்றிக் கொம்பு தோன்றுகிறது. ''முற்றல் ஆமை இளநாகமொடு ஏன முளைக் கொம்பு அவை பூண்டு'' என்று திருஞான சம்பந்தர் பாடியிருக்கிறார். அந்தக் கொம்பின் வளைந்த வடிவத்தைப் பார்த்துவிட்டு மேலே இறைவன் திருமுடியின் மேல் உள்ள பிறைச் சந்திரனையும் பார்க்கிறார் அம்மையார். மீண்டும் மீண்டும் பார்க்கிறார். பிறைச் சந்திரனும் வளைந்த வெள்ளையான பன்றிக் கொம்பும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான தோற்றத்தை அளிக்கின்றன. இடத்தினால்தான் வேறுபாடு. சந்திரன் தலையில் இருக்கிறான்; பன்றிக்கொம்பு திருமார்பில் இருக்கிறது. இரண்டும் வடிவத்திலும் வண்ணத்திலும் ஒப்புமையுடையனவாக இருக்கின்றன.

அந்தப் பாம்பு கீழும் மேலும் பார்க்கிறதே, இந்த இரண்டையுந்தான் பார்க்கிறதோ? அதற்கும் இந்த இரண்டும் ஒரே மாதிரியான தோற்றத்தை அளிக்கின்றனவோ?

ஆம்; அப்படித்தான் இருக்க வேண்டும். தலைமேல் ஒரு சந்திரன், மார்பிலே ஒரு சந்திரன். இப்போது காரணம் தெரிகிறது. பாம்புக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. தலையின் மேலே உள்ள பிறையைப் பார்க்கிறது; உடனே மார்பில் உள்ள பன்றிக் கொம்பைப் பார்க்கிறது. இரண்டும் பிறைச் சந்திரனாகவே தோன்றுகின்றன. எது உண்மையான பிறை என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. நாம் கண்டு கொள்ளலாம். அது அறிவில்லாத பாம்பு. பாம்பாட்டி கைவிரல்களை மடக்கி ஆட்டும் போது அதுவும் ஒரு பாம்பு என்று எண்ணிப் பாம்பு ஆடுகிறதே; அந்தப் புத்தித்தானே இதற்கும் இருக்கும்?

இந்தப் பாம்பு சந்திரனை விழுங்கியிருக்கும்; விழுங்காமல் இருப்பதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை. அதன் முட்டாள்தனந்தான், மதியின்மைதான் காரணம். சந்திரனும் பன்றிக் கொம்பும் ஒரே மாதிரி இருக்கின்றமையால் எது சந்திரன் என்று அந்த மதியில்லாத அரவுக்குத் தெரியவில்லை. மதியில்லா அரவுக்கு மதி இது என்று தீர்மானமாக நிர்ணயம் செய்ய முடியவில்லை, அதனால் துணிந்து சந்திரனிடம் சென்று விழுங்கவில்லை. இன்னும் அதன் சந்தேகம் தீரவில்லை. மேலே உள்ளது சந்திரனா, அல்லது கீழே மார்பில் உள்ளதுதான் சந்திரனா என்று இன்னும் சந்தேகத்திலே அதன் மனம் ஊசலாடுகிறது. அதனால்தான் அந்த அரவு சந்திரனை விட்டு வைத்திருக்கிறது. இன்றளவும் மதியில்லாத அரவு, இது மதி என்று தேராததாகவே இருக்கிறது. தெரிந்திருந்தால் மதி தலையில் இராது.

இப்படியெல்லாம் எண்ணி ஒரு கற்பனையான காரணத்தைக் கண்டுபிடித்த அம்மையார் மதி ஒன்று இல்லாத அரவின் செயலைச் சொல்கிறார்.

> **திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்:**
> **பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்:**
> **—ஒருநாள்**
> **இதுமதி என்று ஒன்றாக இன்றளவும் தேரா**
> **தது, மதிஒன்று இல்லா அரா.**

[மதி ஒன்று இல்லா அரா-ஆராய்ந்து பார்க்கும் அறிவு சிறிதும் இல்லாத (சிவபெருமான் அணிந்திருக்கும்) பாம்பு. பெருமான் திருமார்பில்-இறைவன் அழகிய மார்பில் உள்ள, ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்-(இதுதான் சந்திரனோ என்று) பன்றியின் வளமான கொம்பைப் பார்க்கும்; பெருமான் பிறைக் கொழுந்தைப் பார்க்கும்-இறைவன் (முடிமேல் அணிந்துள்ள) இளம் பிறையைப் பார்க்கும்; இன்றளவும்-இந்த நாள் வரைக்கும். ஒரு நாள்-ஏதேனும் ஒரு நாளில். இது மதி என்று-இதுதான் சந்திரன் என்று. ஒன்றாக-ஒரு முடிவாக, தேராதது-தெரியாதது.

அரா பார்க்கும், நோக்கும், இன்றளவும் தேராதது என்று கூட்டிமுடிக்க. பெருமான் என்ற சொல்லைத் திருமார்பில் என்பதற்கும் கூட்டுக. நடுநிலைத்தீவகம். ஏனம்-பன்றி. பிறைக்கொழுந்து-கொழுந்தாகிய பிறை; மிக இளைய பிறை. இன்றளவும் ஒரு நாளேனும் தேராதது. ஒருநாளும், ஒன்றும் இல்லா என்ற இடங்களில் உம்மை தொக்கது. ஒன்றாக-ஒரு முடிவாக; ஒருதலையாக. அரா, தேராதது. ஒன்றும்-சிறிதும்.]

இது **அற்புதத் திருவந்தாதியில்** 48-ஆவது பாடல்.

சிபி சரித்திரம்

அ. லெ. நடராஜன்

உசிநர நாட்டை சிபி என்னும் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பல யாகங் கள் செய்து மேன்மை பெற்றவன்.

வரம் கொடுப்பவர்களுள் சிறந்தவர்களான இந்திரனும் அக்கினியும் சிபியைச் சோதிக்கும் பொருட்டு, கழுகாகவும் புருவாகவும் உரு வெடுத்துக்கொண்டு, சிபியின் யாகசாலைக்கு வந்தார்கள்.

அக்கினி, புரு வடிவத்தை எடுத்துக்கொண் டான். இந்திரன் கழுகு உருவை எடுத்துக்கொண் டான்.

புருவைக் கழுகு துரத்தி வந்தது.

கழுகுக்குப் பயந்த புரு, சிபி அரசனைத் தஞ்சம் அடைந்து, அவனுடைய தொடையில் ஒளிந்து கொண்டது.

அதை விரட்டி வந்த கழுகு அரசனை நோக்கி, ''அரசே! உன்னை அனைவரும் தருமப்படி நடப் பவன் என்று பாராட்டுகிறார்கள். அத்தகைய நீ தரும விரோதமான காரியத்தைச் செய்ய ஏன் விரும்புகிறாய்? பசியால் வருந்தும் நான், எனக்கு இயைந்த உணவான புருவை விரட் டிக்கொண்டு வந்தேன். தர்மத்தின் மீது பிடிப்புள்ள நீ எனது உணவைக் கெடுக்காதே. தருமத்துக்குப் புறம்பாக நடந்து உன்னை நீ கெடுத்துக் கொள்ளாதே'' என்று கூறியது.

உடனே அரசன் சிபி, அதை நோக்கி, ''கழுகே! சிறிய உருவமுள்ள இந்தப் புரு, பெரிய உருவம் படைத்த உனக்குப் பயந்து, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, என்னைத் தஞ்சம் அடைந்திருக்கிறது. பயந்து தஞ்சம் அடைந்து இருக்கும் ஒரு உயிரைக் காப்பது, தருமம் ஆகும். அவ்வாறு நான் செய்யாது போனால் அதுவே என்னை இகழ்ச் சிக்கு உட்படுத்திவிடும். பிராமணனைக் கொல் வது, உலகத்துக்குத் தாயான பசுவைக் கொல் வது, தஞ்சம் அடைந்ததைக் கைவிடுவது ஆகி யவை பாவம் செய்வதற்குச் சமம் ஆகும்'' என்று சொன்னான்.

உடனே கழுகு வடிவத்தில் வந்திருக்கும் இந்திரன், ''பூமிக்கு அதிபதியாய் இருப்பவனே! உயிர்கள் உணவினால் உண்டாகின்றன; வளர் கின்றன; வாழ்கின்றன. விடமுடியாத விருப்பங் களை விட்டுவிட்டு எந்த உயிரும் வாழ முடியும். ஆனால் உணவை விட்டுவிட்டு, எந்த உயிரும் நெடு நாள் வாழ முடியாது. எனக்கு உணவு கிடைக்க முடியாதபடி நீ செய்வதால், எனது உயிர் என் உடலை விட்டுப் பிரியப் போகிறது. நான் இறந்து போனால், என் மனைவி மக்கள் எல் லாரும் உயிர் வாழ முடியாது அழிந்து போவர். தர்மம் தெரிந்த நீ புரு ஒன்றைப் பாதுகாப் பதன்மூலம், பல உயிர்களைப் பாதுகாப்பதி லிருந்தும் நழுவ நேர்கிறது. எந்த ஒரு




தர்மம் பலருக்குத் தீங்கு செய்யுமோ அது தர்மம் ஆகாது. பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதது எதுவோ அதுவே தர்மம் ஆகும். அரசே! தர்மங்களுள் ஒன்றுக்கு ஒன்று விரோத நிலை உண்டாகுமாயின், எந்த ஒரு தர்மத்தில் தீமை குறைவாக இருக்குமோ அதையே ஒரு வன் செய்ய வேண்டும். தர்மத்தை நிச்சயிக்கும் போது, எதில் நன்மை அதிகமாகவும் தீமை குறைவாகவும் இருக்கிறதோ, அதையே தர்ம மாகக் கொள்ள வேண்டும்'' என்று கூறினான்.

கழுகு இவ்வாறு நியாய அநியாயத்தை நிச் சயித்துக் கூறியதைக் கேட்ட அரசன் சிபி, ''பறவைகளுள் சிறந்த பறவையே! அறத்தை அறிந்துள்ள நீ நியாயமாகவும் சிறந்த முறை யில் பேசுகிறாய். ஆச்சரியப்படும் முறையில்

இவ்வாறு அழகாகப் பேசும் நீ பறவைகளுக்கு அரசனுக இருக்கும் கருடனு? தஞ்சம் அடைந்தவனைக் கைவிடுவது எப்படி அறத்தின்பாற் படும்? பறவையே! உணவின் பொருட்டு நீ இவ்வாறு கூறுகிருய்? நீ முயல்வாயானுல் இதை விட வேறு நல்ல ஆகாரத்தை உன்னுல் தேடிக் கொள்ள முடியும். காளேயோ பன்றியோ மானே இவற்றுள் நீ எதை விரும்பினுலும் அதை உனக்கு ஆகாரமாகத் தரச் செய்வேன்'' என்று கேட்டான்.

அதற்கு அந்தக் கழுகு, ''அரசே! காளே, பன்றி, மான் போன்ற எந்த ஆகாரத்தையும் நான் விரும்பவில்லே. எனக்கு இயற்கை புருவையே உணவாக அமைத்துள்ளது. அதை விடுத்து வேறு எதையும் உண்ண நான் பிரியப்



படவில்லே. கழுகுகள் புருக்களேத் தின்பது தொன்று தொட்டே இருந்து வரும் ஒரு பழக்கம். அரசே! சமமில்லாத தர்மத்தில் பற்று வைப்பது சரியில்லே'' என்று கூறியது.

கழுகு இவ்வாறு சொன்னதும் அரசன் உசிநரன், ''பறவையே! இந்த ராஜ்யத்தையே உனக்கு நான் தருகிறேன். அரசர்கள் போற்ற இந்த ராஜ்ஜியத்தை நீ ஆண்டு வா. இந்தப் புருவை மட்டும் இரையாகக் கேளாதே. இதை நான் உனக்குத் தரப்போவது இல்லே'' என்று உறுதியோடு கூறினுன்.

இதற்குக் கழுகு உடன்படவில்லே. ''உசிநரனே! இந்தப் புருவின் எடைக்குச் சமமாக உனது உடலிலிருந்து தசையை நீ அறுத்துத் தருவாயாயின் நான் சம்மதிப்பேன்'' என்று தெரிவித்தது.

கழுகு சொன்ன நிபந்தனேயைக் கேட்டு, அரசன் உசீநரன் மகிழ்ச்சி அடைந்தான். அவன் கழுகைப் பார்த்து, ''பறவையே! எனக்கு இயலுமானது ஒன்றை நீ கேட்டதனுல் நான் மகிழ்ச்சி அடைகிறேன். புருவின் எடைக்குச் சமமாக எனது தசையை அறுத்துத் தராசில் வைத்து நிறுத்து உனக்கு நான் தருகிறேன்'' என்று கூறிவிட்டு, தனது தசையை அறுத்து, தராசில் வைத்து நிறுக்கலானுன்.

நிறுக்க நிறுக்க, புருவின் எடைக்குச் சமமாக சிபியின் தசை போதாமல் இருந்தது.

இதைக் கவனித்த அரசன் தாமதியாது, புருவுக்கு எதிர்த்தட்டில் ஏறி உட்கார்ந்தான்.

உடனே கழுகு வடிவத்தில் வந்திருந்த இந்திரன், ''அரசே! தர்மங்களே அறிந்தவனே! நான் இந்திரன்; இந்தப் புரு அக்கினி தேவன்; தருமத்தை உன்பால் அறியும் பொருட்டு, நாங்கள் உனது வேள்விச் சாலேக்கு வந்தோம். புருவின் பொருட்டு, நீ உனது தசைகளே அறுத்துக் கொடுத்த செயல் பற்றிய உனது புகழ் என்றென்றைக்கும் நிலேத்து இருக்கும். உலகத்தில் மனிதர்கள் வாழும்வரை உனது புகழ் ஓங்கி நிற்கும்'' என்று மனமுவந்து பாராட்டினுன்.

பிறகு உசீநரனுக்கு அவனும் அக்கினி தேவனும் தேவையான வரங்களே நல்கிவிட்டு, மகிழ்ச்சியுடன் தேவலோகம் திரும்பினுர்கள்.

உசீநரன் உடம்பு முன்புபோலவே பிரகாசித்தது. அவனுடைய புகழ் விண்ணிலும் மண்ணிலும் பரவியது.

பிறகு அந்த அரசனும் சொர்க்கலோகத்தை அடைந்தான். அவனுடைய புகழ் மங்காது மறையாது உலகில் இன்றும் நிலவி வருகிறது.

கடவுள், ஒரு மனிதனே, நீ எந்த இனத்தான், எந்த ஜாதியான் என்று கேட்க மாட்டார். நீ செய்திருப்பது என்ன என்றே கேட்பார்.

—**சீக்கியம்**

நன்மை செய்வது புனிதமானது; தீங்கு செய்வது அசிங்கமானது; தீங்கு செய்பவர்களேத் தேவர்கள் வெறுக்கிருர்கள்.

—**ஷிண்டோ மதம்**

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

சுவாமி விவேகானந்தர்

1

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்துகொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வதுதான்.

இயல்பாகவே இயற்கையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்குமானால், அப்போதும்கூட அனைவருக்கும் சமமான வாய்ப்பு-வசதிகள் இருக்கத்தான் வேண்டும். அல்லது ஒரு சிலருக்கு அதிகமாகவும், மற்றும் சிலருக்குக் குறைவாகவும் தான் வாய்ப்பு வசதிகள் அமைந்திருக்கும் என்ருல், வலிமையுள்ளவர்களுக்குத் தருவதைவிட, பலவீனமானவர்களுக்குத்தான் அதிக அளவில் வாய்ப்புகள் தரப்பட வேண்டும். அதையே வேறுவிதமாகச் சொல்வதென்ருல், சண்டாளன் ஒருவனுக்குத் தேவையான அளவிற்கு பிராம்மணன் ஒருவனுக்குக் கல்வி தேவையில்லை. பிராம்மணனுடைய மகனுக்கு ஓர் ஆசிரியர் தேவைப்பட்டால், சண்டாளனுடைய மகனுக்குப் பத்து ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். யார் ஒருவனுக்குப் பிறவியிலேயே இயற்கை கூரிய அறிவாற்றலைத் தரவில்லையோ, அத்தகையவனுக்குத்தான் பெருமளவிற்கு உதவிகள் கொடுக்கப்பட வேண்டும். திறமையுள்ளவனுக்கே மீண்டும் உதவி செய்பவன், கொல்லன் வீதியில் ஊசியை விற்கும் பைத்தியக்காரனைப் போன்றவன். **ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாவர்கள்—ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.**

2

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான், எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் சிவபெருமானைக் காண்பவனே, உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான். சிவபெருமானை விக்கிரகத்தில் மட்டும் காண்பவனுடைய வழிபாடு ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது.

3

கடவுளிடம் நம்பிக்கையில்லாதவன், தத்துவ தர்சனங்கள் இல்லாதவன், மதப்பிரிவுகள் எதிலும் சேராதவன், எந்த ஒரு கிறிஸ்தவக் கோயில்களுக்கும் இந்து கோயில்களுக்கும் செல்லாதவன், இலௌகிகப் பற்றிலேயே தோய்ந்து போனவன்—என்று இப்படி எல்லாம் ஒருவன் இருந்தாலும் கூட, அவனும் மிக உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதை புத்தர் பெருமானுடைய வரலாறு காட்டுகிறது..... ஒரு யாகத்தில் விலங்குகளைப் பலியிடுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தமது உயிரை வழங்கவும் அவர் ஒருவர்தான் எப்போதும்



தயாராக இருந்தார். ''நீ சொர்க்கம் போவதற்கு ஓர் ஆட்டுக் குட்டியைப் பலியிடுவது உதவி செய்யுமென்ருல், ஒரு மனிதனைப் பலியிடுவது அதைவிடவும் அதிகமாக உனக்கு உதவி செய்யும். எனவே என்னை நீ பலியிடு'' என்று ஒருமுறை ஓர் அரசனிடம் கூறினர். அதைக் கேட்ட அந்த அரசன் வியப்படைந்து போனுன்.

4

'நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிருர்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக அறிஞன் தன்னைத்தானே தியாகம் செய்துவிட வேண்டும்.' உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெற முடியும். இதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை.

5

கிராமம் கிராமமாகச் சென்று மனித குலத்திற்கும் பரந்த இந்த உலகத்திற்கும் நன்மை செய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கும் செல்ல

வேண்டும். மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும்போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

6

பெரியவர்கள் பெருந்தியாகங்களைச் செய்கிருர்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம். உன்னுடைய சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினல், அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுதற்குரியதில்லை. உலகத்தின் நன்மைக்காக உன்னுடைய முக்தியையும் நீ தியாகம் செய்துவிட விரும்புகிருயா? அப்படி நீ செய்தால் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். இதைச் சற்று சிந்தித்துப் பார்.

7

இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து நீ தப்பி ஓட முயற்சி செய்யாதே. வெற்றியா தோல்வியா என்று நீ கவனித்துக் கொண்டிருக்காதே. பரிபூரணமான தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு. வெற்றி பெறுவதற்காகவே பிறந்துள்ள மனம், உறுதியுடன் தானுகவே இணைந்து, விடாமுயற்சி செய்கிறது என்பதை உணர்ந்து கொள்.... வாழ்க்கை என்னும் போர்க்களத்தின் நடுவில் வாழ்ந்து வா. ஒரு குகையில் இருக்கும்போதும் சரி, அல்லது தூங்கும் போதும் சரி, யார் வேண்டுமானுலும் அமைதியாக இருக்க முடியும். மும்முரமான வேலைகள் என்னும் சுழலில் நின்றபடி உனது குறிக்கோளாகிய ஆத்மனை நீ அடைய வேண்டும். ஆத்மனை நீ கண்டு பிடித்து விட்டால் எதுவுமே உன்னை அசைக்க முடியாது.

8

புனிதமான வாழ்க்கையின் விளைவாக எழும் உற்சாகத்தினல் எழுச்சி அடைந்தவர்கள்; கடவுளிடம் அழியாத நம்பிக்கை என்பதை அரணுகப் பெற்றவர்கள்; ஏழை எளியவர்களிடமும் தாழ்ந்தவர்களிடமும் ஒடுக்கப்பட்டவர்களிடமும் கொண்ட இரக்கம் காரணமாக சிங்கத்தையொத்த தைரியம் அடைந்தவர்கள்—இத்தகைய ஆண்களும் பெண்களும் நூறுயிரம் பேர் வேண்டும். இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தவர்களின் முன்னேற்றம், சமூக சமத்துவம் ஆகிய இந்த உயர்ந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்தபடி இந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்ருெரு மூலைவரை செல்வார்கள்.

9

என் மகனே! உனக்கு எனது சொற்களின் பேரில் ஏதாவது மரியாதை இருக்குமானுல், முதலாவதாக உன்னுடைய அறையின் எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து விடு. இதுவே நான் உனக்குத் தரும் முதல் அறிவுரையாகும். கீழ்நோக்கிச் சென்றபடியும் துன்பத்தில் மூழ்கியபடியும் ஏராளமான ஏழை மக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். நீ அவர்களை அணுகிச் சென்று உன்னுடைய ஆர்வத்தையும் உற்சாகத்தையும் செலுத்தி அவர்களுக்குத் தொண்டு செய். நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்க ஏற்பாடு செய். உன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி அந்த நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய். பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு. அறியாமையில் உள்ளவனுக்கு உன்னுல் முடிந்த அளவிற்குக் கல்வியறிவைப் புகட்டு. என் மகனே! நான் உனக்குச் சொல்கிறேன்—இந்த முறையில் உன்னுடைய சகோதரர்களாகிய மக்களுக்கு நீ தொண்டு செய்ய ஆரம்பிப்பாயானுல், நிச்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

10

அந்நாளில் நிலவிய தொண்டு மனப்பான்மை, கீழ்ப்படிதல், தன்னடக்கம் ஆகிய வீரனுக்குரிய பண்புகள் எங்கே போய்விட்டன? போருக்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்து கொள்கிருனேயன்றி, தனது நலத்தைக் கருதுவதில்லை. ஒருவன் மற்றவர்களுடைய இதயங்களின் மீதும் வாழ்க்கையின் மீதும் ஆணை செலுத்த வேண்டுமானுல், முதலில் கட்டளைக் குட்பட்டு முன்னேறிச் சென்று தனது உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

11

அச்சமே மரணம். அச்சத்திற்கப்பால் நீ போக வேண்டும். இன்று முதல் அச்சம் அற்றவனுக இரு. நீ மோட்சம் பெறும் பொருட்டும் பிறருடைய நலத்துக்காகவும் உயிரைக் கொடுக்

கச் சித்தமாயிரு. எலும்பும் சதையும் பொருந்திய இந்தச் சுமையைச் சுமந்துகொண்டு திரிவதால் என்ன பயன்?

12

பணம் படைத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இருக்கிறார்களே, அவர்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டாம். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைவிட செத்துப் போனவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள். பணிவும், தாழ்மையையும், ஆனால் அதே சமயத்தில் நம்பிக்கைக்குரியவர்களுமாகிய உங்களிடம்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டங்கள் எதுவும் தேவையில்லை, அதனால் ஆகப் போவதும் ஒன்றுமில்லை. துன்பத்தால் வாடுபவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். பிறகு உதவிக்காக கடவுளை நோக்குங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயமாக வந்தே தீரும்.

. . . .குளிராலோ, பசியாலோ இந்த நாட்டிலேயே (அமெரிக்காவில்) நான் அழிந்து போக நேரலாம். ஆனால் இளைஞர்களே! ஏழைகள், அறியாமை மிக்கவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய நலனுக்காகப் போராடும் என்னுடைய இரக்கம், முயற்சி ஆகியவைகளை உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். நாள் தோறும் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்த முப்பது கோடி மக்களின் நல்வாழ்வை மீட்டுத் தருவதற்காக உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாக சபதம் மேற்கொள்ளுங்கள்.

13

தன்னம்பிக்கையே வடிவெடுத்த, நிறைந்த தூய்மையே வடிவெடுத்த ஆறு மனிதர்கள் ஆற்றிய பணிகள்தாம் இந்த உலகத்தின் வரலாறாகத் திகழ்கிறது. இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை. **வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை நீ உருவாக்கிக் கொள்.** முதலில் உலக மக்களின் துன்பங்களைக் குறித்து நீ வருந்து . . . .வெறுப்புணர்ச்சியாலோ, பொறாமையாலோ, உன்னுடைய மனம் அலைக்கழிக்கப்படாமல் இருக்கிறதா என்று உன்னையே நீ கேட்டுக் கொள். உலகின் மீது வெறுப்புணர்ச்சி, கோபம் ஆகியவைகள் அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக நல்ல காரியங்கள் தொடர்ந்து பல காலமாக நிறைவேற்றப்படாமல் போயிருக்கின்றன. மாறாக தீமையே விளைவிக்கப் பட்டிருக்கிறது. நீ தூய்மை உள்ளவனாக இருந்தால், வலிமை உள்ளவனாக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

14

மற்றவர்களுடைய நன்மைக்காக என்னுடைய இந்த வாழ்க்கை அழிந்து போகிற அந்த நாளும் வருமா? இந்த உலகம் வெறும் குழந்தை விளையாட்டு அல்ல. மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் ரத்தத்தைச் சிந்தி, பாதை அமைப்பவர்கள்தான் பெரியோர்கள் ஆவார்கள். ஒருவர் தனது உடலைத் தந்து பாலம் ஒன்றை அமைக்கிறார். அந்தப் பாலத்தின் உதவியால்,பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த ஆற்றைக் கடந்து விடுகிறார்கள். இது நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த முறை அப்படியே இருக்கட்டும்! அப்படியே இன்றைக்கும் இருக்கட்டும்.



மதம் உள்ளபோதே மனிதர்கள் நாம் காணுகிறபடி இவ்வளவு கெட்டவர்களாய் இருந்தால், மதம் இல்லாவிட்டால் இன்னும் எவ்வளவு கெட்டவர்களாய் இருப்பார்கள்?

—**பிராங்ளின்**

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி......

நமது 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற இனிய தமிழ் வெளியீடு கனியமுதம்போல் சித்தத்தில் தித்திக்கின்றது. சமானமில்லாத பரமஞானியின் திருப்பெயரால் வெளிவரும் இப் பத்திரிகையின் அரிய தெய்விகத் தொண்டை எவ்வளவு வேண்டுமானுலும் பாராட்டலாம். சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் இந்த மாத வெளியீடு பரம பவித்திரமான கங்கா ஜலம் போன்ற தூய்மையானது. உள்ளத்தைத் தூய்மை செய்து இறையருளைத் தப்பாமல் நல்கும் இதனை, தமிழ் மக்கள் அனைவரும் ஒரு பெரும் வரப்பிரசாதமாக ஏற்றுப் படித்து, மிகுந்த பயனைப் பெறுவார்களாக.

அன்பன்

—**கிருபானந்தவாரி**

உயிர் வளர

மனிதன் உடம்பினுல் விலங்கினத்தைவிட வேருக இருக்கிருன். உடம்பை வளர்க்கச் சுவையான பண்டங்களைச் சமைத்து உண்கிருன். உணவுக்கலை எவ்வளவோ பரந்து விரிந்திருக்கிறது. மனிதனுடைய உள்ளம் விலங்கின் உள்ளத்தைவிடப் பன்மடங்கு சிறந்தது. மனத்தால் தான் மனிதன் உயர்கிருன். அந்த உள்ளம் வளர நூல்களைக் கற்கிருன். பலர் உரைகளைக் கேட்கிருன். கல்வியினுலும் கேள்வியினுலும் உள்ளம் வளர்கிறது. அதற்காகப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அமைத்துக் கொள்கிருன். உடம்பு, உள்ளம் இரண்டுக்கும் மேற்பட்டது உயிர். அதை வளர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும்? ஆன்மீக நெறியில் சென்று இறைவன் அருளைப் பெற வேண்டும்.

உயிரை வளர்க்கும் ஆன்மநெறியைப் போதித்த மகான்கள் பாரத நாட்டில் பலர் உண்டு. இன்று உலகம் முழுவதும் இந்து சமயத்தின் ஆன்மீக சாதனைகளைப் பாராட்டத் தொடங்கியிருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் ஸ்ரீவிவேகானந்தரும் விதைத்த விதை இப்போது மரமாகிப் பயன் தந்து வருகிறது. உயிரை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை மக்களூடே உண்டாக்கியிருக்கிறது.

அந்தப் பெருமக்கள் காட்டிய நெறியில் நின்று ஆன்மீக உண்மையை மக்களுக்குவிளக்கிக் காட்ட அங்கங்கே ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் நிலவுகின்றன. சென்னையில் ஸ்ரீராமகிருஷ்ணானந்தரால் தொடங்கப்பெற்ற ஸ்ரீராமகிருஷ்ண மடம் பல ஆண்டுகளாக ஆன்மீகத் துறையிலும் சமூகநலத் துறையிலும் பல தொண்டுகளை ஆற்றி வருகிறது. பல விழாக்களை நடத்தி மக்களின் ஆன்மீகப் பசியை எழுப்பி வருகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் ஐம்பத்தேழு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேச விளக்கங்கள், அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்த பல ஞானிகளுடைய நல்லுரைகள், சமய சம்பந்தமான தெளிவுரைகள், கதைகள், பிற சமயங்களைப் பற்றிய விளக்கம் முதலிய பலவகையான கட்டுரைகளும் கதைகளும் வெளியிட்டு இப்பத்திரிகை ஆன்மீக நெறிக்கு வழிகாட்டுகிறது; உயிர் வளரும் மார்க்கத்தைக் காட்டுகிறது. இந்த அரிய பத்திரிகையை வீட்டில் வைத்திருந்தால் குழந்தைகள் முதல் கிழவர் வரையில் படிக்கலாம். ஆண்டுச் சந்தா ரூபா ஏழு, 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-4' என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள். மாதந்தோறும் இந்த ஆன்மீக நெறிவிளக்கு உங்களை நாடிவரும்; உயிர் வளரும் நெறியைக் காட்டும்.

—**கி. வா. ஜகந்நாதன்**

கலைமகள் இதழ்: நவம்பர் 1977

சில பத்திரிகைகளைப் படிக்கப் புகுவது பார்க்கில் நுழைவது போன்றது. இன்னும் சில பத்திரிகைகளில் நுழைவது உலாவச் செல்வதை ஒத்தது. வேறு சிலவற்றைப் பார்ப்பது கடைவீதிக்குப் போவதைப் போன்றது.

மிகச் சில பத்திரிகைகளையே கோவிலுக்குள் பயபக்தியோடு நுழைந்து வழிபடுவதைப் போன்ற சிரத்தையுடன் படிக்க முடியும். இப்படிச் சிரத்தையோடு படிக்க முடிந்த இதழ்களில்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயமும் ஒன்று. ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து பல்லாண்டுகளாக வெளி வரும் இந்த இதழ் வியாபாரத்துக்காக அந்தரங்க சுத்தியை இழந்து விடாமல் நடத்தப்படும் பத்திரிகைகளில் ஒன்று. ஆத்மசுத்தி—அந்தரங்க சுத்திக்கான விஷயங்களைக் கொண்டு இது வெளி வருகிறது. மாற்றங்கள், ஏமாற்றங்கள், வர்த்தக தகிடுத்தங்களைச் செய்யாமல் வெளிவரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை எவ்வளவு பாராட்டினாலும் அதில் ஒரு சொல்லும் மிகையாக இராது என்று நான் துணிந்து கூறுவேன்.

—நா. பார்த்தசாரதி
1977 டிசம்பர் இதழ் 'தீபம்'.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சஞ்சிகையை அவ்வப்போது பார்த்து வருகிறேன். ஒவ்வொரு இல்லத்திலும் இச்சஞ்சிகை விளங்கும் நாள் என்று வருமோ!

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அன்னை சாரதாமணி போன்றோரின் அருள் வாக்குகளினால் மட்டுமல்லாமல், அவர்களது அருள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிவதனாலும் நமது மக்கள் பெரும் பயன் எய்துவர். இப்போது போலவே, தொடர்ந்து அத்தகு தெய்வத் தன்மை வாய்ந்த, நமது மண்ணில் வாழ்ந்திருந்த அப்பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுபடக் கதைகளாக இந்த சஞ்சிகை வெளியிடுமானால் அற்புதமான நற்பயன்களை நமது மக்கள் பெறுவர். எல்லாவற்றுக்கும் காலமும் குருவின் அருளும் பாலிக்குமாக.

—ஜெயகாந்தன்

மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற மாதப் பத்திரிகையை நடத்தி வருகிறது. இது விவேகானந்தரின் குரல். தமிழகத்திலேயே வெளிவரும் ஆன்மீகத் தெய்விகப் பத்திரிகைகளிலேயே மிகவும் சிறந்த பத்திரிகை **ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்**தான். பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் இல்லாவிட்டால் இந்து மதமும் ஆன்மீகமும், அடியோடு போயிருக்கும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருக்கருத்துகளைத் தாங்கிவரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை இந்துக்கள் படித்து, இந்து மதத்தை இவ்வுலகில் இணையிலா மதமாக்க வேண்டும்.

—கல்கண்டு
18-8-77

மக்களை நல்வழிப்படுத்த அவ்வப்போது மகான்கள் தோன்றி, உபதேசித்து நடந்து காட்டி, மக்களை அறநெறிப்படி செல்லச் செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பாரத நாடெங்கும் ஆன்மீக விழிப்பை ஊட்டினார். அவரது கொள்கைகளைப் பரப்புவதற்கென்று மகத்தான இயக்கமாகப் பணி புரிந்து வரும் இராம கிருஷ்ண மடத்தவர்களின் கல்வி, சமூக, அறநெறித் தொண்டு பெரிதும் பாராட்டுதற்குரியன.

இராமகிருஷ்ண—விவேகானந்த இயக்கத்தார் கல்வித் தொண்டு புரிவதுடன் தமிழில் மிக உயர்தரமாக மாத இதழ் ஒன்றை 56 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகிறார்கள்.

தமிழ் மூதறிஞரான சுவாமி விபுலானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்கு ஆசிரியராக இருந்திருக்கிறார். ஸ்ரீராமகிருஷ்ண விஜய மாத இதழ் அன்று முதல் இன்று வரையிலும் நல்லொழுக்கம், அறநெறி, சமய விளக்கம், மூத்தோர் உரைகள் கொண்டு மிகச் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

சமீப காலத்தில் புதுப்பொலிவோடு காலத்திற்கேற்ற அச்சு அமைப்புடன், தரத்தை எந்தவிதத்திலும் குறைக்காமல் 'விஜயம்' வெளிவருவது பாராட்டுதற்குரியது. அதில் வெளி வரும் உயர்தரக் கட்டுரைகளுக்காகவும் அமைப்புக்காகவுமே, வாசகர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும்.

வாழ்க ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்!

—விக்கிரமன்
அமுதசுரபி இதழ்: டிசம்பர் 1977

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004

1978 பிப்ரவரி மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த ஜயந்தி விழா: *(மாலை 5-30 முதல் 6-30 வரை)*

1-2-78 புதன்கிழமை: **சுவாமி விவேகானந்தர் போதித்த ஆன்மீக சாதனைகள்**
—திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (தமிழ்)

2-2-78 வியாழன்: **விவேகானந்தரின் அறைகூவல்**
—சுவாமி சமக்ரானந்தர்

3-2-78 வெள்ளி: **விவேகானந்தரும் தற்கால நிலைமைகளும்**
—திரு ஏ. சுப்ரமண்யம் (தமிழ்)

4-2-78 சனி: மாலை 4 மணிக்கு **சுவாமிஜியும் நவீனகாலச் சிந்தனைகளும்**
—டாக்டர் சி. வி. சுப்ரமண்யம் (ஆங்கிலம்) &
டாக்டர் வி. பாலசுப்ரமண்யம் (ஆங்கிலம்)

5-2-78 ஞாயிறு: **விவேகானந்த ஜயந்தியின் பொதுவிழா**
காலை 8-15க்கு சென்னைக் கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தல்.
மாலை 4 முதல் 5 வரை **பக்திப் பாடல்கள்**
மாலை 5 முதல் 7 வரை **பொதுக்கூட்டம்**
தலைவர்: மாண்புமிகு பிரபுதாஸ் பட்வாரி (தமிழக ஆளுநர்)
பேசுவோர்: திருமதி லட்சுமி என். மேனன்
திரு கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர்: 'கலைமகள்'

இந்திய தத்துவஞானம் தொடர் சொற்பொழிவு:
உத்தர மீமாம்சை
26-2-78 ஞாயிறு *தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர்*
மாலை 4-30 முதல் 6-30 வரை *பேசுவோர்: திரு வி.ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (தமிழ்)*
டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (ஆங்கிலம்)

சத் சங்கம் : *ஞாயிறுதோறும்* *மாலை 4 மணி முதல் 8 மணி வரை*
மாலை 4 முதல் 4-20 வரை *ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (12-2-78)*
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (19-2-78)
மாலை 4-20 முதல் 4-30 வரை *தியானம்*
மாலை 4-30 முதல் 5-30 வரை *சொற்பொழிவு (தமிழ்)*
1. **ஸ்ரீமத் ராமாயணம்**—*டாக்டர் என். வீழிநாதன் (12-2-78)*
2. **ஸ்ரீமத் பாகவதம்**—*திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (19-2-78)*

மாலை 5-35 முதல் 6-30 வரை *சொற்பொழிவு (ஆங்கிலம்)*
1. **ஸ்ரீமத் பகவத்கீதை**—*சுவாமி கபீரானந்தர் (12-2-78)*
2. **பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**—*சுவாமி தபஸ்யானந்தர் (19-2-78)*

சிறப்புச் சொற்பொழிவுகள்:
சனிக்கிழமைகளில்
மாலை 5-30 மணிக்கு
1. **நாராயணியம்**—*திரு ஆர். கோதண்டராமன் (11-2-78)*
2. **பாகவதத்தில் ஆராய்ச்சி**
—திரு பி. இராமகிருஷ்ணன் (18-2-78)
3. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—*சுவாமி கிர்த்திதானந்தர்(25-2-78)*

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—*(மாலை 5-30)*
வழக்கம் போல ஒவ்வொரு நாளும் நடைபெறும்

விசேஷ தினங்கள்: *அந்தர் யோகம் (சாதனை தினம்)—ஞாயிறு (12-2-78)*
9-2-78 செவ்வாய்: சுவாமி பிரம்மானந்த ஜயந்தி
11-2-78 சனிக்கிழமை: சுவாமி திரிகுணாதீதானந்த ஜயந்தி
22-2-78 புதன்: சுவாமி அத்புதானந்த ஜயந்தி
ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம்: **ஏகாதசி தினங்களில்**
ஆரதிக்குப் பிறகு (4-2-78 & 18-2-78)

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

தொலைபேசி: **71231**

ஆண்டுச் சந்தா: இந்தியா—ரூ. 7.00 இலங்கை—ரூ. 18 யு.எஸ்.ஏ.—$ 3.00
பிறநாடுகள்—£ 1.70 ஆயுள் சந்தா: இந்தியா—ரூ. 100 யு.எஸ்.ஏ.—$ 50.00
பிறநாடுகள்—£ 20.00 தனிப்பிரதி வெளிநாடு: ரூ.—2

தனிப் பிரதி 70 காசு